ஆனந்த போதினி

ஆகஸ்டு 1926

12

72
ை211, N15AB
N26·12·2
169841

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)

| தொகுதி | அக்ஷய௵ ஆவணிமீ ௧௨ | பகுதி |
| --- | --- | --- |
| 12 | 1926௵ ஆகஸ்ட்டுமீ 17௳ | 2 |

## கடவுள் வணக்கம்.

புத்தமிர்தபோகமுங்கற்பகா னிழலிற்
பொலிவுற விருக்கு மியல்பும்
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக்கமும்
"மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தன்னவுமெ
மாலுமொரு சுட்டுமறவே
வைகின்ற வைப்பான மௌனதே சிகனென்ன
வந்தநின் னருள்வாழிகாண்
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே
சுருதிமுடி வானபொருளே
சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள்
சுரந்துபொழி கருணைமுகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்[illegible]யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. (1)

---

...க்குங் கைக்கு மௌன மௌனமென்
...ஞ் சொற்கொண் டிராப்பக லற்றிடா
...ப்பமுண் டோகல் லடியரைத்
...னந்தத் துவெளி வென்னமே. (2)

---

...ரிய வறிவெனும்
...த் தந்தையு நீயென்றால்
...தச் சிவத் திரனன்றோ
...பரொளி யான வகண்டமே. (3)

---

13 SEP 192
JL
211, N15AB
N26·12·2
16984

## அரும்பொருள் விளக்கம்.

1. ஞானசாரியரால் உண்மை நிலையை யறிந்தவர்கள், நூதனமாகிய அமிர்தானுபவத்தையும், கற்பகத்தருவின் நிழலில் வீற்றிருக்கும் இருப்பையும், சுவர்க்கலோகத்திலுள்ள ஐராவதமென்னும் யானையின்மேலேறுகின்ற சிறப்பையும், பூமண்டலத்தில் ஏற்றத்தையும் விரும்பார்கள்; இவையாவும் பிரபஞ்ச மாயையாகிற பிரமையிற் சிக்குண்டவர்களால் மதிக்கப்படுவனவாம். மாயையிற் கட்டுண்டார்க்கு இவை சாசுவதமானவை என்று புலப்படுமேயொழிய நிலையற்றவை என்கிற உணர்ச்சியுண்டாகாது.

“யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனே யெம்பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே”

என்று திருவாசகமும்,

“***மெய்யன்புடையார் அருவருத்துத் தள்ளிய செல்வம்”

என்று திருவிளையாடற் புராணமும்,

“ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே”

என்று பெருமாள் திருமொழியுங் கூறுவது காண்க.

பொலிவு, வரிசை, ஆதிக்கம் என்பவை சிறப்பு அல்லது மேன்மை என்கிற ஒரு பொருளைக் குறிக்குஞ் சொற்கள்.

மத்தம்=உன்மத்தம் (பிரமை.)

மால்=ஆசையின் விவகாரம்.

எம்மாலும் ஒரு சுட்டுமறவே=எங்களாலும் ஒரு சுட்டுதல் அற்றொழியவும். ஏகதேச வுணர்வாற் சுட்டியுணரப் படுவதெல்லா மசத்தாகலின் அது நீக்கிச் சுட்டற்ற சுத்தாத்துவித நிலையில் சேர்ப்பான் என்பார் ‘சுட்டுமறவே வைக்கின்ற வைப்பானன்’ என்றார்.

“[illegible] சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சுட்ட[illegible] சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்ததீ சத்[illegible] யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொ[illegible]விட்டுப் போம்”

என்று சிவஞானபோதமும்,

16984
சென்னை-600 008
[illegible]
26/12-2



“முன்னிலை யேதுமில்லாதே—சுக
முற்றச் செய்தேயெனைப் பற்றிக்கொண்டாண்டி”

என்று இவ்வாசிரியரது ஆனந்தக்களிப்பும் கூறுவது காண்க.

திருமூலர் மரபில் வந்த இவரது ஆசிரியராகிய மௌனகுரு தமக்கு அனுக்கிரகித்த திருவருளை எண்ணி ஆனந்தமேலீட்டால் ‘நின்னருள் வாழி’ என்றனர்.

2. ஐம்புலன்களின் சேட்டைகளை யொழித்து மனமொடுங்கப்பெற்று உள்முக நோக்கிலிருக்கும் மௌனிகளைப் போன்று இவரும் இருப்பதாக நடித்து வாயாற் பேசாமலும், கையை யாட்டாமலும் இருந்து ஏமாத்துகிறேனெ[illegible]பார். ‘வாய்க்குங்...........மென்றேய்க்கும்’ என்றார்.

இ[illegible]கல்=கேவல சகலம்.

[illegible]ரி=சிதாகாசம் (சிதம்பரம்.)

3. இறைவனைத் தந்தை யென்றும், இறைவியைத் தாயென்றும், சீவான்மாக்களைச் சேய்களென்றும் இதில் கூறினமையால், பரமான்மா ஒன்றென்றும், சீவான்மா பலவென்றும் அச்சீவான்மாக்கள் பரமான்மாவை அருள் மூலமா யடையவேண்டுமென்றும் கொள்ளப்பட்டன.

பேரொளி=பரஞ்சோதி.

[illegible]அகண்டம்=வியாபகம்.

திரள்=தொகுதி.

சேய்=மக்கள்.

# ஆனந்தபோதினி

அக்ஷய௵ ஆவணி௴ கஉ

## நாகரிக மயக்கம்.

உலகத்தில் மனிதர், கண்ணுக்கினிமையும், புதுமையும் தரும் ஆடையாபரணங்களையணிந்தும், அலங்காரங்களைப் புரிந்தும், நாவிற்கினியவும் நூதனமுமான உணவாதிகளை யுண்டும், இன்னும் களிப்பைத்தரும் நுகர்பொருள்களை நுகர்ந்தும், கல்வியிற் சிறந்தும், அழகிய வார்த்தைகளைப் பேசியும் தங்கள் வாழ்க்கையை நடத்தும் இயற்கையே நாகரிகமெனப்படும். இதனாலேயே ‘நாகரிகம்’ என்பதற்கு விநோதம், சாதுரியம், புதுமை என்னும் பல பெயர்கள்

வழங்குகின்றன. இதனையுடையோர், மனிதரிற் சிறந்தோராகக் கருதப்படுவர். பஞ்சகாவியங்களில் முதன்மைபெற்றதாகிய சீவகசிந்தாமணியில் அறிவு, அழகு, ஆற்றல் முதலியவற்றிற் சிறந்தவனாகிய சீவகனை 'நாகரிகன்' எனக் கூறியிருப்பதால் இது விளங்கும். இத்தகைய சிறப்புக்கள் மிகுதியும் நகர மாந்தர்களிடமே உண்டென்றும், அதனாலேயே அவர்கள் நாகரிகர்களென அழைக்கப்படுகிறார்களென்றும், ஆகவே 'நாகரிகம்' என்பது 'நகரமாந்தர் ஒழுக்கம்' என்று பொருள்படுமென்றும் சில அறிஞர் கூறுகின்றனர்; வேறு சிலர், நாகர்கள்—(நாகலோகத்தார் அல்லது தேவர்கள்) களிப்பிற் சிறந்த வாழ்க்கையுடையவர்களென்றும், அதனால் அவர்களின் வாழ்க்கைபோன்ற சிறந்த வாழ்க்கைக்கு 'நாகரிகம்' எனப் பெயருண்டாயிற்றென்றும் உரைக்கின்றனர். நாகர் சிறந்த வாழ்க்கை யுடையவரென்பது சீவகசிந்தாமணியில் பல விடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இதன் கருத்து எவ்வாறாயினு மாகுக; பொதுவாக நோக்குமிடத்து இது, மனிதரின் அழகிய நடக்கை யென்பது துணியப்படும். இது நகரத்துக்குமட்டுந்தான் உரியதென்பதன்று; நாட்டிற்கும் உண்டு; நகரத்திலுள்ளவர்களாயினும் சரியே நாட்டிலுள்ளவர்களாயினும் சரியே அறிவின்மிக்காரிடத்திலேயே இஃதுண்டாகும்; சாதாரணமானவர்களிடத்தில் உண்டாவதில்லை; அதனால் நாகரிக முடையார் அறிஞரென்றும், அஃதில்லார் அறிவில்லாரென்றும் பலராலும் மதிக்கப்படுவர்.

இந்நாகரிகம் அறிஞரால் விரும்பக்கூடியதா யிருத்தலின், அவர்கள் அதனைத் தங்கள் இயற்கையிலும் உண்டாக்கிக்கொள்வார்கள்; அன்னிய நாட்டினரின் ஆசாரங்களைப் பார்த்தும் விருத்திசெய்துகொள்வார்கள். இந்நாகரிகமானது மனித சமூகத்தாருக்கு வேண்டியது அவசியந்தான். நாகரிகமுடைய நாடே உலகத்தில் உயர்வெய்தி விளங்கும்.

எனினும் நாகரிகத்தைச் சார்ந்த செயல்கள் எவை யென்பதை ஆராய்ந்துகொள்ளவேண்டும். ஒரு நாட்டார் நாகரிகமடைவதில் தங்கள் நாட்டியல், குலவொழுக்கம், அறநெறி முதலியவற்றிற்குக் கேடுண்டாகாத செய்கைகளையே எடுத்துக்கொண்டு மற்றவற்றை அறவே ஒழித்துவிடவேண்டும். ஒரு நாட்டிற்குப் புறநாட்டு நாகரிகங்களுள் பொருந்தாதன பலவுண்டு; பொருந்துவன சிலவுண்டு; ஆதலின், புறநாட்டாசாரங்களைக் கைக்கொள்வதிலும் பொருந்துவன



கொண்டு பொருந்தாதன தள்ளவேண்டும். அன்னியநாட்டார் சிலரிடத்தில் சிரத்தையுடன் கல்விகற்றல், விடாமுயற்சியுடன் தொழில் முடித்தல், காரியங்களுக்கென்று நியமித்துக்கொண்ட காலங்களைத் தவறவிடாதிருத்தல், குறித்த ஒரே காலத்தில் உணவுண்ணல், குறித்த நேரத்தில் உறங்குதல், விழித்தல், உடம்பு, உடைகள், வாசஸ்தானம், ஆகாரம் முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், ஆபரணங்களை நல்ல அமைப்பில் செய்துகொள்ளுதல், அளவறிந்து பேசுதல் முதலிய பல சிறந்த நாகரிகச் செயல்களிருக்கின்றன, இவைபோன்றவைகளை நம் நாட்டினர் எடுத்துக்கொள்ளலாம். அவர்களிடத்தில், மதுபானம், சிகரெட், சுருட்டுப் பிடித்தல், பிறர்பார்க்கவொண்ணாத தேக வுறுப்புக்கள் வெளிக்குத் தோற்றும்படி உடையணிதல், பெண்களும் ஆண்களும் கைகோத்தாடுதல், பெண்கள் தனியே பல விடங்களிலும் சஞ்சரித்தல், எந்த ஆடவரோடும் தனித்துச் செல்லுதல், தனித்துப் பேசுதல், பெண்ணும் ஆணும் கைகோத்துக்கொண்டு தெருவில் நடத்தல், தலைமுடிகளைப் பல விகாரங்களாக வெட்டுதல், இஞ்சு மீசை வைத்தல் முதலிய எண்ணிறந்த தீய வொழுக்கங்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றை நம் நாட்டவர் கனவிலும் கருதலாகாது. இங்ஙனம் பலவற்றையும் பகுத்துணர்ந்து தங்கள் நாட்டியலும் குல வொழுக்கமும் குன்றாது தீயன வொதுக்கி நல்லன கொண்டு நடப்போரே நாகரிகர்களெனப்படுவார்கள். மற்றையர் அநாகரிகராவர். பொருந்தாத புறநாட்டாசாரங்களை நாகரிகமெனக் கொள்ளுதல் நாகரிக மயக்கமெனப்படும்.

இங்குக் கூறியபடியே நம் நாட்டில் சில விவேகிகள், நம் நாட்டியற்கை குன்றாத விதத்தில் நாகரிகமடைந்து சிறப்புற்று வருகின்றார்கள். வேறு பலரோ, நம் நாட்டிற்குப் பொருந்தாத அனுசார-மானக்கேடான-செயல்கள் எத்தனையுண்டோ அத்தனையும் நாகரிகச் செயல்களென மயங்கி மேற்கொண்டு மக்கட்டன்மையை விடுத்து, மாக்கட்டன்மைபூண்டு தேசத்திற்கே இழிவுண்டாமாறு செருக்கித் திரிகின்றனர். அந்தோ! இவர்களால் உலகம் கெட்டிருக்கும் கேட்டை எழுதுதற்குக் கையும் மனமும் நடுங்குகின்றன: சிலர், தங்கள் நாட்டியலை மறைத்து அன்னிய நாட்டார்போல் உடையணிந்து வேடத்தை மாற்றிக்கொள்ளுகிறார்கள்; தலைமயிரைப் பல விகாரங்களாக வெட்டி வளைத்துத் திருத்தி முருக்கி வித்தியாசமாகச் சின்ன

பின்னப்படுத்துகின்றனர்; நாசிக்கு நேரே ஈ ஒட்டினதுபோல் இஞ்சு மீசை வைத்து முகத்தை விகாரப்படுத்துகின்றனர்; தங்கள் மதக் குறிகளாகிய விபூதி தரித்தல், நாமமிடல், சந்தனமணிதல் முதலியவற்றை அறவே யொழித்து இன்ன மதத்தினரென்று பிறர் உணர்ந்து கொள்ளாத விதத்தில் உலவுகிறார்கள்; அறநெறிகளை அகற்றி விடுகின்றனர்; தெய்வத்தைச் சிறிதும் சிந்திப்பதேயில்லை; கோவில் பக்கம் திரும்பிப் பார்ப்பதுமில்லை; பெரியோர்க்கு வணக்கம் புரிவதில்லை; ஐரோப்பியரைப் போல் போலிவேடந்தரித்துக் கையில் வாக்கிங் ஸ்டிக் (உலவுகைக்கோல்) பிடித்துத் தலை நிமிர்ந்து ஒய்யார நடை நடந்து எதிரில் பெரியாரைக் கண்டால் மரியாதை செய்வதற்குப் பதிலாக இடக்கை ஆட்காட்டி விரலை நெற்றியில் வைத்து அவமரியாதை செய்து செல்கின்றனர்; படுக்கையிலிருந்தபடியே பல் துலக்காமல் காபி யருந்துகின்றனர்; சதா சர்வகாலமும் பீடி, சிகரெட் முதலியவைகளைக் கொளுத்தி வாயில் வைத்துப் புகையை யிழுத்து விட்டுக்கொண்டு திரிகின்றனர்; (திருவிழா முதலியவை நடக்கும்போது ஜனங்கள் திரண்டு செல்லும் தெருக்களில் ஒரு வீட்டின் மேல் ஏறி நின்று பார்த்தால் மனிதர் வாயிலுள்ள சிகரெட் பீடிகளின் நெருப்பு அக்கூட்டத்தினிடை யிடையே மிக நெருக்கமாக ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்கள் தெரிவதுபோல் விளங்குவதைக் காணலாம்; இஃதொன்றினாலேயே அநாசார நாகரிக மயக்கம் எவ்வளவு பரவி யிருக்கிறதென்பதை நன்குணரலாம்).

சிலர் மதுபானம் முதலிய லாகிரி வஸ்துக்களை அதிகமாக உட்கொண்டு தலைவிரித்தாடுகின்றனர்; அனாவசியமாகக் காப்பிக் கிளப்புகளில் புகுந்து இருக்க விடமில்லாமலும் நெருங்கிப் பெருமைக்குத் துட்டைச் செலவழித்து கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்; அடுத்த தெருவுக்குப் போவதற்கும் துடித்த மோட்டார்களில் ஏறுகிறார்கள்; விரைவில் ஒழிந்துபோம் புறநாட்டுப் பொருள்களை வாங்கி வீட்டில் நிரப்பி வறிஞராகின்றனர்; நூதன முறையில் கல்வி கற்பதாகப் பூர்த்தியற்றதும், பிழை மலிந்ததுமாகிய கல்வியைக் கற்றுச் செருக்கி முறைப்படி கற்றாரை அவமதிக்கின்றனர்; தங்களுக்கு ஒன்றுமே தெரியாத விஷயங்களில், தவறான அபிப்பிராயங்களை உயர்ந்த அபிப்பிராயங்களாகக் கூற முற்படுகின்றனர். எழுத்துப் பிழையின்றி எழுதத் தெரியாதவர்களும் ஒரு வியாசத்தில் உள்ள உட்கருத்தை உணராமல், 'இதென்ன பாட்டிகதை' என்று உயர்ந்த பத்திரிகைகளையும்,



பெரியார் உரைகளையும் அவமதிக்கின்றனர். பெண்மக்கள் விஷயங்களிலும் முறைகேடான ஒழுக்கங்களைப் புகவிட்டு வருகின்றனர். அறியாத இளம் பெண்களைத் தனியே எங்கும் சஞ்சரிக்கவிடுகின்றனர்; வண்டியோட்டுவோர் முதலிய ஆடவருடன் தனியே அவர்களை வண்டியில் எங்கு மனுப்புகின்றனர்; வாலிப வயதுள்ள ஆடவர்களை வீட்டுச் சமையல் வேலைக்கமர்த்திப் பருவமங்கையர் தனித்திருக்கு மிடங்களில் சஞ்சரிக்கச் செய்கின்றனர்; இன்னும் பெண்களுக்குப் புத்தியை மயக்கும் நாடகப் பாடல்களைக் கற்றுக்கொடுக்கின்றனர்; நாடகம் பயிற்றுவிக்கின்றனர்; அவர்கள் நாடகம் நடத்துமாறு செய்தும் பார்த்துக் களிக்கின்றனர். புருஷரைப்போலவே பெண்களும் சுயேச்சையாகப் பல துறைகளில் இறங்கவேண்டுமென்று முயலுகின்றனர். இவற்றின் பயனாகப் பெண்மணிகளிற் சிலரும் தனியே தூரதேசப் பிரயாணம் செய்கின்றார்கள்; எந்த ஆடவரோடும் கூசாமல் வார்த்தையாடுகின்றார்கள்; உடல்தெரிய ஆடையணிகின்றார்கள்; கழுத்துக்குக் கீழ் முன்பக்கமும் பின்பக்கமும் தெரியும்படி இரவிக்கை யணிகிறார்கள்; சங்கீதம் கற்றுக் கச்சேரி நடத்துகிறார்கள்; நாடகமும் ஆடுகின்றார்கள்; இன்னும் எத்தனையோ விநோதச் செயல்களுண்டு; அவை விரிக்கிற் பெருகும்.

இவைகளே பெண்களின் விருத்திக்கும் தேச க்ஷேமத்திற்கும் உரிய மார்க்கங்களென்றும், இவற்றை மறுப்போர் நாகரிகம் தெரியாத கருநாடகப் பேர்வழிகளென்றும் சில நூதன விவேகிகள் கூறுவர். இவை ஒருபோதும் நன்மையை யுண்டாக்கமாட்டா. பெண்களும் தேசமும் மேன்மையடையவேண்டுமானால் பெண்மக்கள் உயர்தரக் கல்விபயின்று நல்ல சீலத்தையும், குடும்பம் நடத்தும் இயற்கைகளையும், நம் தேசாசாரங்களையும், தெய்வ வழிபாடு முதலியவற்றையும் நன்குணர்ந்து அறநெறியிற் பிறழாது குடும்ப காரியங்களை ஏற்று நடத்திவர வேண்டும். தங்கள் ஒழுக்கங்கெடாது தமக்கென ஏற்பட்ட தொழில்களைச் செய்யவேண்டும். இவையே அவர்களுக்குச் சிறப்பைத் தருவனவாம். இவற்றைவிட்டுப் புறநாட்டாசாரங்களைப் பார்த்து அன்னியர்போல் நடக்கத் தொடங்கி நம் நாட்டாசாரங்களை விடுத்து எங்கும் வெளியேறித் திரிவதாலும், மூக்க ஈனமான வேறுசில துறைகளிற் புகுவதாலும் சிறப்புண்டாக மாட்டாது. இவற்றாலுண்டாகும் தீங்குகளுக்களவில்லை. ஸ்திரீகள் தனித்துச் சுயேச்சையாக வெளியேறித் திரிதல், உடல்தெரிய

உடையணிதல், நாடகமாடல் முதலிய தீய வொழுக்கங்களால் என்ன தீமை விளையுமென்பதை, புத்திமான்கள் ஆழ்ந்து யோசிப் பார்களாயின் அது அவர்களுக்கு விளங்காமற் போகாது. அனுபவ மாக நடந்துவரும் சில விஷயங்களாலும் தெரிந்துகொள்ளலாம்.

மனத்தைப் போன போக்கில் விட்டுத் திருப்தியடையும் சிலர், தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டு இவ்வாறு அநாகரிகச் செயல்களை யெல்லாம் நாகரிகமென வாதித்துப் பொது ஜனங்களைத் தங்கள் வழிக்குத் திருப்பித் தீய வொழுக்கங்களைப் பரப்பிவருகின்றனர். மேல்நாட்டுத் துராசாரங்கள் வந்து இங்கே தலைகாட்டுவது இவர்களுக்கனுகூலமா யிருக்கின்றது. அவற்றைப் பார்த்தே இவர்களும் அவற்றின் வழியிற் புகுகின்றனர். மேல் நாட்டுப் பெண்கள் மிகுதியும் நாடகமாடுவதைப் பார்த்து நம் நாட் டுப் பெண்களும் இப்பொழுது நாடகத் தொழிலில் அதிகமாய்ப் புகுந்து வருகின்றார்கள். சில வருடங்களுக்குமுன் நாடகத்தில் பெண்களே ஆக்டராக இல்லாமலிருந்தார்கள்; இப்பொழுதோ ஒவ் வொரு கம்பெனியிலும் பெண்களே மலிந்திருக்கின்றனர். அதிலும், நாகரிகமயக்கம் அதிகமாக அதிகமாக கண்ணால் பார்க்கத் தகாதன வும், வாயால் சொல்லத் தகாதனவுமாகிய செய்கைகளெல்லாம் நடந்துவருகின்றன. நாடகப் பெண்கள் உடல்தெரியும் மெல்லிய உடையணிந்து, திருடனாகவும், அரசனாகவும் வேடந்தரித்துவரும் ஆண்மக்களுடன் அருவருப்பான சம்பாஷணைகள் செய்வதும், எதிர்த்தாடுவதும், கைகோத்தாடுவதும் கேட்கவும், பார்க்கவும் கூடாதனவா யிருக்கின்றன.

இப்பொழுது புறநாடுகளில் நாகரிக முதிர்ச்சியால் இன்னும் எத் தனையோ ஆபாசச் செய்கைகள் தோன்றிவருகின்றன; கண்ணால் பார்க்கத்தகாத பயாஸ்கோப் (புகைப்படம்) காட்சிகள் நடைபெற்று வருகின்றன; சமீபத்தில், அமெரிக்காவின் தலைநகராகிய் நியூயார்க் பட்டணத்தில், 'எர்ல்கரோல்' என்னும் பிரபு ஒரு நாடகசபை போஷ காரயிருப்பதாகவும், அவர், தம்முடைய பிறந்ததினக் கொண்டாட் டத்தன்று நாடகமேடையில், இராக்காலத்தில் 17-வயதுள்ள "மிஸ்- ஜாம்ஸ்ஹாலி" என்ற அழகிய நாடகப்பெண்ணை, திகம்பரி-நிர்வாணி- யாக்கி 'ஷாம்பெயின்' என்ற சாராயமுள்ள தொட்டியில் இறங்கிக் குளிக்கச்செய்து, அங்கிருந்த ஆடவர்களை வரிசையாக நிறுத்தி, அந்தச் சாராயத்தை ஒவ்வொருவருக்கும் ஊற்றிக்கொடுத்து, அந்



தப் பெண்ணின் அழகை வர்ணித்துப் பிரசங்கம் புரிந்து, 'இவளு டைய அழகை நினைத்துப் பருகுங்கள்' என்று சொன்னதாகவும், அவர்கள் அவ்வாறே குடித்ததாகவும், அந்தப் பெண் தன்னை அவ் வாறு அவமானஞ் செய்ததற்கு அவர்மீது வழக்குத் தொடுத்திருப் பதாகவும், விசாரணை வெகு விநோதமாக நடந்துவருவதாகவும் ஒரு வர்த்தமானம், 2-7-26. "சுதேசமித்திரன்" 2-ம் பக்கத்தில் "சாராயத் தொட்டியில் ஸ்நானம், ஒரு நாடகப்பெண்ணின் ரஸமான வாக்கு மூலம்" என்ற தலைப்பின்கீழ் வெளிவந்திருப்பதைப் பலர் பார்த்தி ருக்கலாம். இதைக்கொண்டே அன்னியநாட்டு நாகரிகங்களினடி யாக எவ்வளவு ஒழுங்கீனச் செய்கைகள் உற்பத்தியாகின்றனவென் பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய அனுசாரங்களை யெல்லாம் நம் நாட்டவர் நாகரிக மென மிக்க ஆவலுடன் வரவேற்பவரா யிருக்கின்றனர். ஆதலின், இனி இங்குக் குறிப்பிட்ட மானக்கேடான செய்கை போன்றவை களும் நம்மவரிடம் வந்து நுழைந்துகொள்ளும் காலத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். விரைவில் வந்துவிடவும் கூடும். இத்தகைய ஒழுங்கீனச் செய்கைகளால் பல மானக்கேடுகள் நேரி னும் நாகரிக மயக்கந் தலைக்கேறியவர்கள் அவற்றை வெளிக்குக் காட்டாமல் மறைத்துக்கொண்டு, அவற்றால் பற்பல நன்மைகள் விளைவதுபோலப் பேசி இந்த அனுசாரங்கள் மேன்மேலும் விருத்தி யடையும்படி செய்துவருகின்றனர். இந்த அனுசாரங்களை யொழிக் காவிடில், நம் நாடு, அன்னியர் பரிகசிக்கும்படி அநாகரிகப் படுகுழி யில் ஆழ்ந்து மிக்க கேவல நிலையை அடைந்துவிடுமென்பதில் ஐய மில்லை. இவற்றை நீக்க முயலுவாரில்லை. நம் தேயப் பெரியார் செய்த உயரிய அறநெறிகளைப் போதிக்கும் நூல்களில் எங்கோ ஓரிடத்தில் இடக்கரான சொல் வந்துவிட்டால் அதைப் படிப்பவர் கெட்டுவிடுவார்களென்று அந்த நூல்களையே ஒழிக்க வழிதேடிய அதிகாரவர்க்கத்தினராகிய பெரியார்களும்கூட நம் நாட்டு நாடக மேடைகளில் நடக்கும் ஆபாசங்களை அகற்ற முயலவில்லை. அது குற்றமாகத் தெரிந்த இவர்களுக்கு இது நலமாகத் தோற்றுகிறது போலும்! என்ன காலவிகற்பம்!

தேசமுன்னேற்றத்தை விரும்பும் சகோதரர்களே! சகோதரி களே! நம் நாடு நலமுறவேண்டுமானால் நாகரிக மயக்கத்தால் நாட கங்களில் நடக்கும் அருவருப்பான செய்கைகளையும், முன்னுரைத்த

வாறு இதரவகைகளில் விருத்தியாகிவரும் அனாசாரங்களையும் ஒழித்து உண்மையான ஒழுங்கான நாகரிகம்பெற்று வாழ முயலுங்கள்; கல்வி, கைத்தொழில், விபசாயம், வியாபாரம், முதலியவற்றை விருத்திசெய்யுங்கள்; நம் தேசாசாரப்படி உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்து, இனிய அனுபவங்களை அனுபவித்து, அறநெறியைக் கடைப்பிடித்துச் சீரும் சிறப்பும்பெற்று வாழ்வீராக. சீலம் குறையாமல் வாழ்வதே சிறந்த நாகரிக வாழ்க்கையாகும்.

ஓம் தத் ஸத்.

# தேசநலப் பகுதி.

## தேசபந்து தாஸர்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

1917-18-ம் வருஷங்களில் தேசபந்து தாஸர் அப்பொழுது இருந்த அரசியல் நிலைமையைப்பற்றி வங்காளமெங்கும் பல அரிய பிரசங்கங்கள் செய்தார். சென்னைமாநகரில் ஸ்ரீமதி பெசண்ட் அம்மையார் அரசாங்கத்தினரால் காப்பில் வைக்கப்பட்ட காலத்தில் அதைக் கண்டித்த தலைவர்களில் தேசபந்துவும் ஒருவர். அதைக் கண்டிக்க கல்கத்தா நகரிலுள்ள டவுன் ஹாலில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதை நமது காருண்ய அரசாங்கத்தார் தடுத்துவிட்டனர். அந்தத் தடையை தாஸர் தமது முயற்சியினால் நீக்கினார். 1917-ம் ஆண்டில் கல்கத்தா நகரில் நடைபெற்ற காங்கிரஸில் இந்தியாவுக்குச் சுயஆட்சி கொடுக்கப்படவேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்து அவர் செய்த உபந்யாசம் பலராலும் போற்றப்பட்டது.

1919-ம் வருஷத்தில் பஞ்சாபில் நடைபெற்ற படுகொலையே தேசபந்து தாஸரின் உணர்ச்சிகளைத் தீவிரமாகக் கிளப்பிவிட்டதென்று சொல்லலாம். அந்தப் படுகொலையைப்பற்றி விசாரிக்கக் காங்கிரஸ் மகாசபை நியமித்த கமிட்டியில் தாஸரும் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். இக்கமிட்டியார் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சாதாரணமான சிபார்சுகளையே செய்தனர். ஆனால் அரசாங்கத்தார், அந்தச் சிபார்சுகளைக் கவனிக்கவுமில்லை; ஏற்றுக்கொள்ளவுமில்லை.

1919-ம் வருஷம் டிசம்பர்மாதம் பண்டிதமோதிலால் நேருவின் தலைமையின் கீழ் அமிர்தசரஸில் கூடிய காங்கிரஸில் சட்டசபைகளுக்குச்சென்று அங்கு ஒத்துழையாமையை அனுஷ்டிக்க வேண்டுமென்று தேசபந்துதாஸர் மிகவும் வற்புறுத்தினார். ஆனால் அப்பொழுது மகாத்மாகாந்தி பூரண ஒத்துழைப்பையே அனுஷ்டிக்க வேண்டுமென்று கூறினார். இறுதியில் லோகமான்ய பாலகங்காதரதிலகர் பரஸ்பர ஒத்துழைப்பு முறையைக் கையாள



வேண்டுமென்று வற்புறுத்தினார். லோகமான்ய பாலகங்காதரதிலகரின் பரஸ்பர ஒத்துழைப்பு முறையை தேசபந்துவும், காந்தி அடிகளும் ஒப்புக்கொண்டனர்.

இதற்குப்பின் ஆறுமாதங்களுக்குப் பிறகு மகாத்மாகாந்தி தமது ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தார். 1920-ம் வருஷம் அக்டோபர் மாதம் லாலாலஜபதிராயின் தலைமையின் கீழ் கல்கத்தா நகரில் நடைபெற்ற விசேஷ காங்கிரஸில் தேசபந்துதாஸர் காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத்திற்கு விரோதமாகப் போராடினார். ஆனால் காங்கிரஸில் ஒத்துழையா இயக்கத் தீர்மானம் பெரும்பான்மையோரால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறிவிட்டது. அதேவருஷம் டிசம்பர்மாதம் நாகபுரியில் சேலம் ஸ்ரீமான். சி. விஜயராகவாச்சாரியாரின் தலைமையின் கீழ் நடைபெற்ற காங்கிரஸில் மீண்டும் ஒத்துழையாமை வற்புறுத்தப்பட்டது.

காங்கிரஸின் தீர்மானத்திற்குக் கீழ்ப்படிந்து தேசபந்துதாஸர் 1921-ம் வருஷம் ஜனவரிமாதம் முதல் தமது பாரிஸ்டர் தொழிலை நிறுத்திவிட்டார். அவர் பிரபலமாக நியாயவாதத் தொழில் நடத்திவந்த காலத்தில் அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு இரையாகிச் சிறைசென்றவர்களின் குடும்பங்களுக்கும், நாடு கடத்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் பொருளுதவிசெய்து அவர்களைக் காப்பாற்றிவந்தார். எளிய மாணவர்களுக்கும், எளியதேசத் தொண்டர்களுக்கும், மற்றவர்களுக்கும் அவர்செய்த பொருளுதவி அளவிடக் கூடியதன்று. பொதுவாகச் சொல்லுமிடத்து அவர் வங்க நாட்டின் கர்ணனாக விளங்கிவந்தாரென்றே சொல்லலாம். அவர் செய்த கொடைகளையும், உதவிகளையும் வங்காள வாசிகள் என்றும் மறத்தல் முடியாது. இத்தகைய பெரியார் திடீரென்று தமது பாரிஸ்டர் தொழிலைநிறுத்தியதால் பலருக்கும் சங்கடம் ஏற்பட்டது.

### ஒத்துழையாமை.

காந்தி அடிகளின் ஒத்துழையா இயக்கத்தைப் பின்பற்றி, தேசபந்து தாஸர் வங்காளத்தில் தீவிரமாக உழைத்துவந்தார். அவரைப்போலவே அவரது அருமை மனைவியாரான ஸ்ரீமதி வஸந்தாதேவியாரும், அவரது செல்வப் புதல்வரான ஸ்ரீமான் சிரரஞ்சனதாஸரும் தேசத்தொண்டு செய்ய ஆரம்பித்தார்கள். தாஸரது சகோதரிகளில் இருவர் காந்தியடிகளுடன்சேர்ந்து தேசத்தொண்டு செய்ததை இந்தியா என்றும் மறத்தல்முடியாது.

தேசபந்து தாஸரின் வீரமொழிகளைக் கேட்டு வங்கநாட்டுக் கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் பயின்றுவந்த மாணவர்களிலே பல ஆயிரக்கணக்கானவர்கள், தங்களது கல்லூரிகளையும், பாடசாலைகளையும் விட்டுவிட்டுத் தீவிரமாகத் தேசத்தொண்டு செய்வதற்கு முன்வந்தனர். அவர்களில் பலர் நாட்டுத்தொண்டு செய்கையில் சிறைக்கும் சென்றார்கள். காந்தி அடிகளின் ஒத்துழையாமைப்போர் பொதுவாக இந்தியாவில் நடைபெற்றபோதிலும் அது சிறப்பாக வங்காளமாகாணத்தில் தான் நடைபெற்றதென்று கூறலாம்.

தேசத்தொண்டிற்கென மகாத்மாகாந்திதிரட்டிய "திலகர் சுயராஜ்யநிதி"க்கு வங்காள மாகாணத்தில் அதிகமான தொகை தாஸரது முயற்சியினால் தான் சேர்ந்தது. தேசபந்து பாரிஸ்டராக வேலைபார்த்து வந்தகாலத்தில் அவர் மாதம் இரண்டு லட்சம் ரூபாய்கள் வரையில் சம்பாதித்து வந்தாரென்பது அறிஞர்பலரால் சொல்லப்படுகிறது. எனினும் அதைப் பொருட்படுத்தாமல் உதறித்தள்ளி, தேசப்பணியையே தமது கடமையெனக்கொண்டு தேசபந்து தாஸர் நாட்டின் நலத்தைக்கருதிச் செய்த ஊழியத்தை இந்தியர் என்றும் மறத்தல் முடியாது.

கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்ட தேசியக் கல்லூரிக்கு, தாஸர், தாம் சம்பாதித்த தொகையில் பெரும்பாகத்தை நன்கொடையாக அளித்தார்.

## சிறைவாசம்.

1921-ம் வருஷம் டிசம்பர் மாதம் தேசபந்து தாஸர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டார். 1922-ம் வருஷம் பிப்ரவரிமாதத்தில் அரசாங்கத்தார் தேசபந்து தாஸருக்கு ஆறுமாதம் சிறைவாச தண்டனை விதித்தார்கள். நாட்டின் நலத்தையே தமது நலமெனக் கருதியுழைத்த தேசபந்து அந்தச் சிறைவாச தண்டனையைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார். சிறைச்சாலையிலிருந்த காலத்தில் அவருக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. ஆனால் தாஸர் அவைகளை யெல்லாம் உற்சாகத்துடன் அனுபவித்து வந்தார்.

## காங்கிரஸ் தலைமைப்பதவி.

தேசபந்துவின் தியாகத்தையும், தேசசேவையையும் பாராட்டுவதற்கு அறிகுறியாக இந்தியர்கள் 1922-ம் வருஷம் டிசம்பர்மாதம் கயாநகரத்தில் நடைபெற்ற காங்கிரஸுக்கு அவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். தாஸர் அந்தக் காங்கிரஸுக்குத் தலைமைவகித்து, இப்போது இந்தியா அடைந்துள்ள நிலைமையை நன்கு விளக்கிக்காட்டி, அந்த நிலைமையை மாற்றுவதற்கு இந்தியர்கள் செய்யவேண்டிய காரியங்கள் எவை என்பதையும் நன்குவிளக்கினார். அதற்குப் பிறகு அவர் சுயராஜ்யக்கட்சியை ஏற்படுத்தினார். காங்கிரஸ் மகாசபை விஷயத்தில் தாஸருக்கு அளவுகடந்த பக்தியும், அன்பும் உண்டு. ஆதலின், அவர்தாம் ஆரம்பித்த சுயராஜ்யக் கட்சியைக் காங்கிரஸிலிருந்து பிரிக்காமல், காங்கிரஸில் ஓர் அமிசமாக இருக்கும்படி செய்தார்.

## சட்டசபையில் தாஸரது ஊழியம்.

பின்பு சுயராஜ்யக்கட்சியின் தலைவரான தேசபந்துதாஸர் வங்காளமாகாணச் சட்டசபையில் அங்கம் பெற்று, அங்கு இரட்டையாட்சி முறைகள் நடைபெறாமல் ஸ்தம்பித்துப் போகும்படி பலதீர்மானங்களை நிறைவேற்றினார். இடையில் வங்காளகவர்னர் தேசபந்துவை மந்திரிபதவியை ஏற்று அரசாங்கத்தை நடத்தும்படி பன்முறைகேட்டுப் பார்த்தார். ஆனால் தேசபந்து தாஸர் கவர்னரின் வார்த்தைகளுக்குச் சிறிதும் செவிசாய்க்காமல் தமது போராட்டத்தைச் சட்டசபையில் தீவிரமாக நடத்துவதற்கு ஆரம்பித்தார்.



அதன் பயனாக அரசாங்கவேலைகள் நடைபெறுவது மிகவும் கஷ்டமாகிவிட்டது. இதை யொட்டி மத்தியமாகாணத்திலும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் இரட்டைஆட்சி நடைபெறாமல் செய்து விட்டார்கள். 1924-ம் வருஷம் டிசம்பர் மாதம் மகாத்மாகாந்தியின் தலைமையின் கீழ் பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸுக்கு அவர் விஜயம்செய்து அகில இந்திய புத்தகசாலை மகாநாட்டிற்குத் தலைமைவகித்தார்.

## தேகநிலை.

பெல்காம் காங்கிரஸுக்குச் சென்று திரும்பியபிறகு தேசபந்து தாஸர் நோயினால் பீடிக்கப்பட்டு, அதன்பயனாகப் பலவித கஷ்டங்களை அனுபவித்துவந்தார். பின்பு அவர் தமது வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டுச் சிறிதுகாலம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பாடலீபுரத்திலுள்ள தமது சகோதாரின் இல்லத்தில் சிலகாலம் தங்கியிருந்தார். 1925-ம் வருஷம் மார்ச்சுமாதம் நடைபெற்ற வங்காள சட்டசபைக் கூட்டத்திற்கு, நோயினால் பீடிக்கப்பட்டிருந்த தாஸரை நம்மவர் ஒரு நாற்காலியில் வைத்துத் தூக்கிவந்தார்கள். தாஸரின் விஜயத்தின் பயனாக அந்தக் கூட்டத்தில் வங்காளமந்திரிகளின் சம்பளம் நிராகரிக்கப்பட்டது. இந்த விஷயம் எல்லோருக்கும் ஞாபகமிருக்குமென்பதில் ஐயமில்லை.

## மேயர் பதவி (நகரசபைத்தலைவர் ஸ்தானம்)

கல்கத்தா நகரசபையை, சுயராஜ்யக் கட்சியினர் கைப்பற்றியதும், தேசபந்துதாஸரே அதற்கு மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். முதல் முதலாக இந்தியரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் ஸ்ரீ தாஸரேயாவர். தேசபந்து மேயராக இருந்தபொழுது கல்கத்தா நகரவாசிகளின் நன்மைகளைக் கருதி அனேக காரியங்களைச் செய்தார். பொது ஜனங்களின் வரிப்பணம் வீணான வழிகளில் விரையமாகாதபடி அவர் பலவிதத்திலும் தடுத்துவந்தார். பொதுவாக அவர் கல்கத்தாநகருக்கே தந்தையாக விளங்கினாரென்றே சொல்லலாம். கடைசியாகப் பரீத்பூரில் கூடிய வங்காளமாகாண மகாநாட்டுக்கு ஸ்ரீ தாஸர் தலைமைவகித்து அரிய பிரசங்கம்செய்தார். அது இன்னும் இந்தியரின் மனதில் இருந்துகொண்டே யிருக்கிறது.

## மரணம்.

இதற்குப் பிறகு அவர் தமது தேகசௌக்கியத்தைக் கருதி ஓய்வு எடுத்துக்கொள்ளுவதற்காக டார்ஜிலிங் சென்று அங்கே சிலகாலம் தங்கியிருந்தார். ஆனால் அவரைப் பீடித்திருந்த நோய் நாளுக்குநாள் அதிகமாகி வந்தது. அக்காலத்திலும் தேசபந்து தமது தாய்நாட்டை மறந்தாரில்லை. திடீரென்று (16—6—25) செவ்வாய்க் கிழமையன்று மாலையில் அவர் நோயின்கொடுமையைப் பொறுக்க முடியாமல் ஆண்டவன் பொன்னடி நிழலை அடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடைக.

### அவரது பெருமை.

தேசபந்து தாஸர் தமது நாட்டிற்காகப் பொன்னையும் கொடுத்தார்; பொருளையும் இழந்தார்; தாம் அனுபவித்து வந்த இராஜபோகத்தையும் துறந்தார்; தமது தொழிலையும் விட்டார்; தாமும் சிறைக்குச்சென்றார்: தமது ஒரே அருமைக்குமாரன் சிரஞ்சனதாஸையும், தமது உத்தம மனைவியான ஸ்ரீமதி வஸந்தாதேவியாரையும் சிறைக்கு அனுப்பினார்; தமது மாளிகையையும் தேசத்தின்பொது உபயோகத்திற்காக விருப்புடன் அளித்தார்; கடைசியில் தமது உயிரையும் தேசத்திற்காக அர்ப்பணம் செய்தார். வங்கநாட்டின் கற்பகமாய் விளங்கிய இப்பெரியாரது மரணம் இந்நாட்டிலுள்ள எல்லோரையும் கதறும்படி செய்து விட்டது. இவருக்கு விரோதிகளும் இவரது மரணத்தைக்கேட்டு மிகவும் வருந்திக் கதறினார்களென்றால் இப்பெரியாரின் பெருமைதான் என்னே !

தேசத்திற்குப் பந்துவாயிருந்த தாஸர், ஏழைகளுக்குப் பந்துவாயிருந்த தாஸர், தேசத்திற்காகவே இருந்தார்; எளியவர்களின் நன்மைக்காகவே உழைத்தார்; தேசத்திற்காகவே இறந்தார். தேசபந்து தேச ஊழியத்தையே தமது தொண்டாகக் கொண்டவர்; தேசத்தையே அவர் தெய்வமெனப் போற்றி வந்தார். தேசத்திற்கு ஊழியம்செய்வது கடவுளுக்குத் தொண்டு செய்வதாகுமென்று அவர் அடிக்கடி சொல்லுவது வழக்கம். “ என்நாட்டின் விடுதலைக்காக நான் எனது உயிரையும் அர்ப்பணம் செய்யத் தயாராயிருக்கின்றேன் ” என்று அவர் சென்னையில் செய்த பிரசங்கத்தில் கூறியிருக்கின்றார். அதைப்போல் அவர் நாட்டின் விடுதலைக்காகவே தமது உயிரையும் அர்ப்பணம் செய்துவிட்டார். அப்பெரியாரின் பெருமைதான் என்னே!

அவர் சம்பாதித்த பொருள்களெல்லாம் மற்றவர்களுக்கே உபயோகப்பட்டன. தேசபந்து தமக்கென வாழாமல் நாட்டவரின் நலத்திற்காகவே வாழ்ந்து வந்தார் என்பதை உற்றுநோக்கினால் அப்பொழுது நம்தாய்நாட்டின் பெருமை நன்குவிளங்கும். அவர் எத்தனையோ எளியமாணவர்களை ஆதரித்துக் காப்பாற்றி வந்தார். எத்தனையோ எளியவர்களின் குடும்பங்களை ஆதரித்து ரட்சித்தார். நாடுகடத்தப்பட்ட தேசபக்தர்களென்ன, சிறைக்குச் சென்ற தேசத்தொண்டர்களென்ன இவர்களின் குடும்பங்களை, தேசபந்து பாதுகாத்து வந்தார். தாஸரதுமாளிகை ஏழைகளுக்கு அன்னமளிக்கும் ஒரு பெருஞ் சத்திரமாகவே இருந்து வந்தது. அவரது வீரமும், தியாகமும், கொடையும் எண்ணிறந்தவை. அவைகளை விரிக்கிற்பெருகும். அவர் சிறைக்குச் செல்லும்பொழுது கூறியமொழிகள் எவருக்குத்தான் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் அளிக்கா. அவையாவன:—“கைவிலங்குகள் என்மணிக்கட்டுகளில் இருப்பதை நான் உணர்கிறேன். என்தேகம் இரும்புச் சங்கிலிகளினால் பிணிக்கப்பட்டிருப்பதையும் நான் காண்கின்றேன். அடிமை வாழ்க்கையின்துயரம் இதுவே. இந்தியாமுழுவதும் ஒரு பெருஞ்சிறைச்சாலையாகவே எனக்குத் தோன்றுகின்றது. காங்கிரஸ்வேலைகள் தேசவேலைகள்



எப்படியாவது நடைபெறல் வேண்டும். நான்சிறையில் இருந்தால் என்ன, சிறைக்கு வெளியில் இருந்தால் என்ன, உயிருடன் வாழ்ந்தாலென்ன? இறந்துபட்டாலென்ன ?” என்பனவே.

### மதம்.

தேசபந்து தாஸர் ஸ்ரீசைதன்யரின் வைணவ மதத்தைச்சேர்ந்தவர். தேசபந்துவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் விஷ்ணுபக்தர்கள்தாம். தேசபந்துவும் தமது தந்தையைப்போல் பிரம்மசமாஜத்தில் சேர்ந்து அதற்காக மிகவும் உழைத்துவந்தார். ராஜாராம் மோகன்ராய் என்ற பெரியாரிடத்தில் தாஸருக்கு அளவுகடந்த பக்தியும் மரியாதையும் உண்டு. அவரது வழிகளைப் பின்பற்றி நடப்பதில் தாஸருக்கு அளவற்ற ஆசையுண்டு. மேனாட்டார் நமது கல்வி, மதம் முதலியவைகளை அழிக்கச் செய்துவரும் சூழ்ச்சிகளை அவர்மிகவும் கண்டித்து வந்தார். இப்படிப்பட்ட பெரியாரைப்போல் பலர் இந்நாட்டைத் தட்டியெழுப்ப முன்வரவேண்டுமென்பதே எல்லோருடைய பிரார்த்தனை. இப்பெரியாரது வழிகளைப்பற்றி நாம் உழைத்து வந்தால் நமது நாடு மேன்மையுறும்; நம் பண்டைத்தொழில்கள் வளம்பெறும்; நம்நாட்டுப் பொருளாதார நிலை வலுப்படும்; நாட்டைப் பீடித்துள்ள நோய்களும், கஷ்டங்களும் ஒழிந்துபோம். தேசபந்து தாஸரின் நாமம் வாழ்க. சுபம்.

திரு. கே. சுப்பிரமணியம்.

## அறநெறிப் பகுதி.

### ஆரிய சித்தாந்தம்.

### பிதிர்யக்ஞம்.

பிதிர்யக்ஞம் கூறத்தொடங்கிய யாம் அதைச்சற்று நிறுத்திவைத்துக் குரு என்றவிஷயத்தைச் சிறிது கூறினோம். மாதாபிதாக்களைப் போலவே சந்ததியற்ற குருவுக்கும் அபரகிரியைகளை ஒருவன் செய்யவேண்டுமாதலால் அந்தக் குருமார் யார் என்கிற சந்தேகம் ஜனிக்கக்கூடும். ஆதல்பற்றி அதை விரித்தோம். மாதா, பிதா, தமையன், சிற்றப்பன், பெரியப்பன், தாய்மாமன், பெண்கொடுத்தமாமன், பெண்களில் குருவர்க்கத்தில் சேர்த்துக் கூறப்பட்டவர்கள் இவர்களுக்கும் அபரகிரியைகளைச் செய்யவேண்டும். ஆயினும் பிதிர்யக்ஞம் என்று புகழ்ந்து கூறப்படுவது மாதாபிதாக்களுக்குச் செய்வதையே. இதைச் செய்வதனால் மாதாபிதாக்களை நரகதுன்பத்தினின்றும் விடுவிக்கின்றான். இந்தக்கிரியை செய்ந்நன்றி மறவாமையாகிய சற்கிரியையாம். இதை “வடமொழியில்” கிருதக்ஞை என்று புகழ்ந்துகூறும். காசாணாதிகருவிகளையும் கல்வியறிவாகிய ஞானத்தையும் தந்து, அன்னபானாதிகளைக் கொடுத்து வளர்த்து நாலுபேர்களும் மனிதனென்று மதிக்கும்படி செய்து புகழ்

புண்ணியங்களை உண்டாக்கிய மாதாக்களுக்குப் புத்திரன் இந்த நன்றியறிதலாகிய கிரியையைச் செய்யாக்கால் அவன் தேவபிதிர் சாபங்களுக்குப் பாத்திரனாய் நெடுங்காலம் நரகில் வருந்துவான்.

“ எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா—முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு ” என்று தமிழ்வேதம் கூறுவதும் காண்க.

அபரகிரியை என்பது இறந்தபின் செய்யப்படும் கர்மங்கள். அவை தகன கிரியை அல்லது புதைத்தல் முதலிய கிரியையிலிருந்து சபிண்டீகரணம் என்று கூறப்படும் கிரியை வரையிலும் செய்யப்படுவனவாம். தகனம் செய்யுநாள் பனிரண்டு நாள்களில் செய்யப்படும். முன் சந்திரமண்டலத்தில் பிரிவாக்கப்பட்டுப், பனித்துளிவழியாய்ப் பூமியிலிறங்கிச் செடிகொடி முதலியவற்றிற் பிரவேசித்துப் பிதாவின் மூலமாகமாதாவின் கர்ப்பத்தில் பதிந்து உருக்கொண்ட சரீரம் விருத்தியாய்ப் பால யௌவன கௌமார பருவங்களையடைந்து ஓடியாடித்திரிந்து சரீர விருத்தாப்பிய பருவத்தை யெய்திப்பின் வியாதியாதி காரணங்களால் சரீரத்தை விடுவன். விட்டபின் தன்னுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி சொர்க்கநரகங்களை அடைவன். சொர்க்கத்தை யடைந்தவன் புண்ணியபலனுள்ள வரைக்கும் சுகபோகங்களை அனுபவிப்பன், நரகத்தை யடைந்தவன் சதாதுக்கத்தையே அடைவன். அபரகிரியைகள் கிரமப்படி ஒழுங்காகச் செய்யப்பட்டால் சொர்க்கத்தை அடைந்தவனுக்குப் புண்ணியம் விருத்தியாகும். நரகத்தை யடைந்தவனுக்குப் பாபம் குறையும். களையும்தீரும். வருடந்தோறும் செய்யப்படும் பிரத்யாப்திக சிரார்த்தகிரியையால் நரகவாதனை யடைகிறவர்களுக்கு அன்னபானாதிகளால் திருப்தி யுண்டாவதுந்தவிர சீக்கிரத்தில் பாபம் ஒழிந்து நரகத்தினின்று விடுபட்டு வேறுஜன்மத்தையும் அடைவர். இதனால் பெற்றுவளர்த்த மாதாபிதாக்களுக்கு நரகாதி துன்பங்களை ஒழித்து நற்கதியை அளிப்பதே பிதிர்யக்ஞமாம். இதனால் செய்ந்நன்றி மறவாமையாகிய பெரும் புண்ணியத்தைக் கர்த்தா அடைவன். எல்லாப் புண்ணியங்களிலும் இது சிறந்த புண்ணியமாதலால் கர்த்தா நல்லகதியையே அடைவன். ஆதலால் ஆரியசந்ததியிற் பிறந்தவர்கள் இந்தக்கிருத்தியத்தை அவசியம் செய்தேதீரவேண்டும். இல்லாவிட்டால் அவன் ஆரியவம்சத்தனாக மாட்டான். இனி அபரகிரியைகளைச் செய்யவேண்டிய முறைகளை நூலாதாரம்கொண்டு கூறுவோம்.

ஒருவன் மாணதறுவாயில் இருக்கும்போது அவன் சக்தியுள்ளவனாயிருந்தால் கிருச்சிராதி சில கிருத்தியங்களை அவன் செய்துகொள்ள வேண்டும். சக்தியில்லாதவன் பிறரைக்கொண்டு செய்வித்துக் கொள்ளலாம். சுத்தமாகவே சத்தியில்லாதவனுக்கு எளிய பிராயச்சித்தாதிகளைச்செய்விக்கவேண்டும். சத்தியுள்ளவன் தானேசெய்து கொள்ளவேண்டும்.

பிறகு தன் சக்திக்குத்தக்கபடி வேதமுணர்ந்தவர்களுக்குத் தானம் கொடுக்கவேண்டும். அன்னம், பானீயம் (குடிநீர்),கோதானம், வஸ்திரம்,பூமி, படுக்கை, ஆசனம், எள், உப்பு, பொன், வெள்ளி, நெல் இவைகளைத்தானம் செய்யவேண்டும். வானப்பிரஸ்தனுக்கு வித்தை சிநேகிதம், கிருகஸ்தாசிரமிக்குப் பத்தினி சிநேகிதம், வியாதிக்கு ஔஷதம் மித்திரம், மாணம் அடைபவனுக்குத் தானமே மித்திரமென்று பீஷ்மர் தர்மபுத்திருக்கு உபதேசித்ததாகப் பாரதம் கூறுகின்றது. ஆகையால் மாணத்தறுவாயில் இருப்பவன் அவசியம் தானம் செய்யவேண்டும். மாணமடைபவன் ஞாபகத்தை இழந்துவிட்டாலும், மாணத்தையடைந்து விட்டாலும் அவனுடைய புத்திராதியோர் அவனுக்காகத் தானம் செய்யவேண்டும். இந்தத்தானங்களை ஸ்நானம் செய்தபின் செய்யவேண்டும். ஸ்நானம் செய்யாமல் செய்யும் தானம் பலன் தாராது. ஸ்நானம் செய்ய சக்தியில்லாதவர்கள் மந்திரஸ்நானம், பௌமஸ்நானம், ஆக்னேயஸ்நானம், திவ்யஸ்நானம், மானசஸ்நானம், யௌகிகஸ்நானம், வாயவ்யஸ்நானம் என்கிற எழுவகைகளில் ஒருவகைஸ்நானம் செய்யலாம். மந்திரஸ்நானமாவது “ ஆபோஹிஷ்டாதி” மந்திரங்களை யுச்சரித்து நீரைப் புரோக்ஷணம் செய்துகொள்வது. மண்ணைப் பூசிக்கொள்வது பௌமஸ்நானம், சரீரம்முழுவதும் விபூதியைப் பூசிக்கொள்வது ஆக்னேயமாம். பசுமாட்டின் புழுதியை உடம்பில் பூசிக்கொள்வது வாயவ்யஸ்நானமாம். வெய்யிலெறிக்கும்போது பெய்யும் மழையில் நனைவது திவ்யஸ்நானமாம். பாப்பிரமதியானமே மானசிகஸ்நானம். விஷ்ணுவைச் சிந்திப்பது யௌகிகஸ்நானம். சக்தியில்லாதவன் தன் சக்திக்குத்தக்கபடி இந்தஸ்நானங்களை அனுசரிக்கவேண்டியது.



பிறகு தங்கள் குலாசாரப்படி ஊர்த்துவபுண்டாம், திரிபுண்டாம் தரித்துக்கொள்ள வேண்டும். கோபிசந்தனம் தரித்தலே ஊர்த்வபுண்டாமாம். விபூதிதரித்தல் திரிபுண்டாம் என்னப்படும். இவற்றில் ஒன்றைத் தரித்துக்கொண்டு தானம் செய்யவேண்டும். தவளைகள் பாம்பைக்கண்டு நடுங்குவதுபோல ஊர்த்துவபுண்டாத்தைப் பார்த்து எமதூதர்கள் நடுங்குவார்கள் என்று மரீசிகூறினர். ஊர்த்துவபுண்டாம் தரித்தவன் எவ்விடத்தில் இறந்தாலும் அவன் வைகுண்டத்தை அடைவான் என்று விஷ்ணுகூறினார். விபூதிருத்திராட்சதாரணம் செய்துகொண்டு இறந்தவன் ருத்திரசாரூபத்தை அடைவான் என்று ஸ்காந்தபுராணத்தில் கூறப்பட்டது. துளசியைத் தரித்தவன் வைகுண்டத்தை அடைவான் என்றும் ஸ்காந்தம் கூறியது. பிறகு சர்வ பிராயச்சித்தம் செய்யவேண்டும். இதனால் அநந்த பாபங்கள் நீங்கும். இதற்கு பிராஜாபத்திய கிருச்சிரமே பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டது. பிராஜாபத்தியகிருச்சிரமாவது மூன்றுநாள் புசிக்காமலிருப்பது. அல்லது மூன்றுநாட் காலையிலாவது மாலையிலாவது கேளாமல் வந்த உணவைப்புசிப்பது. இது செய்யச் சக்தியில்லாதவன் கன்றுடன் கூடினபசுவைத் தானம் செய்யவேண்டும். பசு அகப்படாவிட்டால் அந்தப் பசுவுக்குள்ள கிரயத்தைக் கொடுக்கவேண்டும். அதற்குச் சத்தியில்லாதவன் ஒரு நிஷ்கம்(ஒருவராகன்) தானம்செய்யவேண்டும். அதற்கும் சக்தியில்லாதவன் அரைவராகன், அதற்கும் சத்தியில்

லாதவன், கால்வராகன் கொடுக்கவேண்டும். அதற்குக் குறைந்தபொருளைக் கொடுக்கக்கூடாது. அல்லது உபவாசமிருக்கவேண்டும்.

இவற்றுக்குச் சக்தியில்லாதவர்கள் மஹாத்மாக்களான பிராமணர்களுடைய ஆசீர்வாதத்தினால் அனுக்கிரகிக்கப்படவேண்டும். அதனால் அவன் சகல பாபங்களினின்றும் விடுபட்டு நற்கதியை அடைவான் என்று ஸ்மிருதிகூறுகின்றது. அதர்வணவேதத்தில் ஒருவன் மஹாத்மாவைச் சந்தோஷப்படுத்தவேண்டும். அதனால் அவன் சர்வபாபங்களினின்றும் விடுபட்டுக் காமசித்தியையும் அடைவான் என்று கூறப்பட்டது. மாஹத்மா என்றது வேத வேதங்களை யோதியுணர்ந்து பற்றற்றிருக்கும் பிரமஞானியையேயாம். நியமங்களைச் செய்யச் சக்தியில்லாமல் படுக்கையி லிருப்பவனுக்குத் தெய்வநாம உச்சாரணம் சர்வபாபங்களையும் போக்கும். அதையே செய்யும்படி அவனுக்குச் சொல்லவேண்டும். அன்றிப் பிராஜாபத்தியம் முதலிய கர்மங்களைச் செய்யச் சொல்கிறவன் நரகத்தை அடைவான் ஆதலால் அவனை தேவநாமங்களையே ஸ்மரிக்கச் சொல்லவேண்டும்.

அந்தியகாலத்தில் "கோவிந்தா" என்கிற நாமத்தை உச்சரித்தவன் சகல பாபங்களையும் ஒழித்து மோட்சத்தை அடைவான். காதாற்கேட்டவனும் நற்கதியையே அடைவான். தன் பிராணன் நீங்குவதற்கு முன் சிவ, சிவ, சிவ என்று எவன் சொல்லுகிறானோ அவன் சம்சாரபந்தத்தைவிட்டு மோட்சத்தை அடைகிறான். ஒருதரம் சிவ என்று சொல்வதினாலேயே அவன் மீளாக்கதியை அடைந்து விடுகிறான். மற்றைய இருநாமங்களும் வேண்டப்படாமல் போகின்றன என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இதனால் சரீரத்தை விடுவதற்கு முன் ஒருதரம் "சிவ" என்றாலே போதுமென்று கூறப்பட்டது காண்க. மரணகாலத்தில் ஒருவன் எதைச் சிந்தித்துக்கொண்டு தனது பிராணனை விடுகிறானோ அவன் அந்தப்பயனையே மறுமையிலடைகிறான். மரணகாலத்தில் மஹாத்மாக்களைத் தரிசிப்பது சகல பாபங்களையும் ஒழித்து மேலான பதவியைத்தரும். இனி முற்கூறிய தசதானத்தைக் கவனிப்போம்.

கோதானம், பூதானம், திலதானம், ஹிரண்யதானம், நெய்தானம், வஸ்திரதானம், தானியதானம், வெல்லதானம், வெள்ளிதானம், உப்புதானம் இவைகளைத் தசதானமென்று சான்றோர் கூறுகிறார்கள். ஒரு குடும்பத்துக்குச் சாப்பாட்டுக்குப் போதுமான அளவுள்ள பூமியைத்தானம் செய்யவேண்டும். ஒருபதக்கு (எட்டுப்படி) எள்ளைத்தானம் செய்யவேண்டும். இரண்டு வராகனெடை தங்கம். நெய்நாலுபடி (படி என்பது பட்டணம் படியளவில் அரைப்படி கொண்டது. இது ஒருநாழி என்னப்படும்.) இது நாலுகொண்டது குறுணி, இரண்டு கொண்டது பதக்கு என்னப்படும். தானியம் ஒன்றரைக்குறுணி, உப்பு ஒன்றரைக்குறுணி அளவு தானம் செய்யவேண்டும். வெள்ளி நாலுவராகனெடை, வெல்லம் ஆறுபலம் (ஒன்றரைவீசை) இரண்டு வஸ்திரம் இவைகளைத் தானம் செய்யவேண்டுமென்று பிரசேதஸ் ஸ்மிருதி கூறுகின்றது.



பாலுள்ள பசுவைத்தானம் செய்தால் அது பிரமலோகத்துக்குப்போகிற வழியைக் காட்டுகிறது. அவன் பிரமலோகம் சென்று மேன்மையை அடைவான். சாளக்கிராம தானமானது நாற்கடல் சூழ்ந்த பூமியைத்தானம் செய்வதற்குச் சமானமாகும். சிவலிங்க தானமானது கோடி பிரமாண்டங்களைத் தானம் செய்தபலனைத் தரும். ஜபதபங்களைச் செய்து கொண்டிருக்கிற ஏழையாகிய சுரோத்திரிய பிராமணனுக்குச் செய்கிறதானம், சொர்க்கலோகம் போவதற்குக் காரணமாகும். ஆதலால் அவனுக்குக்கோதானம், பூதானம், திலதானம் இவைகளைக் கொடுக்கவேண்டுமென்று மஹாபாரதம் கூறுகின்றது. பிராணன் போகும்போது உத்கிராந்தி கோதானம் செய்யவேண்டும். "மரணத்தறுவாயி லிருக்கிற இவனுடைய பிராணன் சுகமாய்ப் போகும் பொருட்டு இந்தப்பசுவை உமக்குக் கொடுக்கிறேன்" என்று மந்திரத்தைச் சொல்லி உத்கிராந்தி கோதானம் செய்யவேண்டும். இந்தத் தானங்களை இறக்கிறவனுடைய புத்திரனாவது, சகோதரனாவது, நெருங்கின பந்துக்களாவது செய்யவேண்டும்.

உத்தராயணத்திலும், அதில் சுக்கிலபட்சம் பகலிலும் மரித்தவன் உத்தம கதியை அடைவான். சுக்கிலபட்சமானாலும் கிருஷ்ணபட்சமானாலும் ஏகாதசியில் மரணம் நேரிட்டால் அவன்மோட்சத்தை அடைவான். பூர்வபாத்ரை உத்தரபாத்ரை, பூரட்டாதி, புனர்பூசம், விசாகம் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை இவைகளில் மரித்தாலும் தகனம்செய்தாலும் அந்தக்கர்மம் மூன்றுதரம் செய்யவேண்டும். அப்படியென்று சொன்னால் அடுத்தடுத்து மூன்றுசாவு நேரிடும். இந்தத்தோஷம் நீங்குவதற்காக, கோதான பூதானங்களையும், மேற்குறித்த கிழமைகளில் மரித்தால் அந்தந்த வார கிரகங்களுக்குரிய பொருள்களையும் தானம்செய்தால் அந்தத்தோஷம் நீங்கும். எள்ளினால் ஒரு பதுமைசெய்து அதை முதலில் தகனம் செய்யவும் வேண்டும். ஆனால் இந்தத் தோஷங்கள் தூரதேசத்தி லிருந்து மரித்தவர்களுக்கே யென்றும். எதிரில் மரித்தால் திதிவாரநட்சத்திர தோஷங்கள் சிறிதுமில்லை யென்று லோகாட்சி முதலியோர் கூறுகின்றார்கள். ஆதலால் இதனை அனுஷ்டான முறையறிந்து செய்யவேண்டும்.

பிறகு மரணம் அடையும் தருணத்தில் இருப்பவனை அவனுடைய புத்திரன் தூக்கி அவன் தலையைத் தனது வலது தொடையில் வைத்துக்கொண்டு அவன் வலதுகாதில் புண்ணிய மந்திரங்களைச் சொல்லவேண்டும். இப்படிச் செய்தால் அந்தப்புத்திரன் தன் கடனிலிருந்து விடுபடுகிறான். இவையெல்லாம் பூமியிற்பரப்பிய தர்ப்பாசனத்தில் படுக்கவைத்தே செய்யவேண்டும். பிராணன் இருக்கிறதோ இல்லையோ என்கிற சமையத்தில் தான் இந்தக் கிரியை செய்யப்பட வேண்டும்; மரித்தபின் தெற்குநுனியாகத் தர்ப்பைகளையிட்டு அதில் படுக்கவைத்து விடவேண்டும். பிறகு கர்த்தாவானவன் தனக்குக் கருமம்செய்ய யோக்கியதை யுண்டாவதற்காகத் தானங்கள் செய்யவேண்டும். இந்தத் தினத்தில் செய்யப்படும் தானங்கள் மிகச் சிரேஷ்டமானவை

இதைப்பற்றி ஸ்மிருதிசந்திரிகையில், ஆயிரம் சூரியசந்திர கிரகணங்களும், பதினாயிரம் விதிபாதங்களும், இலட்சம் அமாவாசைகளும் துவாதசியின் பதினாறில் ஒருபாகத்துக்குச் சமானமாகமாட்டா; அப்படிப்பட்ட துவாதசியில் மூன்றரைக்கோடி துவாதசி சேர்ந்தாலும் மாதாபிதாக்கள் மரித்ததினத்தின் பதினாறில் ஒரு பங்குக்குச் சமானமாகமாட்டா என்று புகழ்ந்து கூறப்பட்டது. ஆதலால் மாதாபிதாக்கள் இறந்ததினம் மஹாபுண்ணியதினமாதலால் எவ்வகைக் கஷ்டப்பட்டாவது அன்று தானாதிகளைச் செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால் இறந்தவர்களும் கர்மம்செய்கிற கர்த்தாவும் பரிசுத்தர்களாய் நற்கதிபெறுவார்கள் என்பது ஸ்மிருதிகர்த்தர்களின் அபிப்பிராயம் என்று விளங்குகிறது.

பகலில் இறந்தவன் சவத்தை இருபத்தைந்து நாழிகைக்குள் தகனம் செய்யவேண்டும். புத்திரன் முதலானவர்களுக்கு எதிரில் ஒருவன் மரித்தால் திதிவார நட்சத்திர தோஷங்களைக் கவனிக்க வேண்டியதில்லை. தூரத்தில் மரித்தவர்களுக்கே அந்தத் தோஷங்கள் கவனிக்கத்தக்கன. இரவில் ஆறு நாழிகைக்குள் மரித்தால் உடனே தகனம் செய்துவிடவேண்டும். அந்தக் காலத்துக்கு மேலானால் தகனம் செய்யக்கூடாது. இரவில் ஒருபோதும் தகனசமஸ்காரம் செய்யத்தகாது. சில சமயங்களில் பிராணவாயு மூக்கு நுனியில் மறைந்து நிற்கும்; அவன் மரித்தவனைப்போலக் காணப்படுவான். ஆதலால் உடனே அடக்கஞ்செய்யக்கூடாது. செய்துவிட்டால் கர்த்தாவுக்குப் பிரமஹத்திதோஷம் சம்பவிக்கும். ஆகையால் இறந்தபின் ஒருஜாமம் அல்லது இரண்டு ஜாமம்வரையில் பிராணன் வருகிறதோவென்று பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். ஒருசமயம் வீட்டில் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்தபிறகாவது, மயானத்துக்குக் கொண்டுபோகும் வழியிலாவது, மயானங் கொண்டுபோன பிறகாவது உயிர்வந்து எழுந்திருப்பதுண்டு. அப்போது அதற்குத்தக்க பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டியது. ஆகையால் இறந்துபோனானென்று நிச்சயமாகத் தெரிந்த பின்புதான் கர்மத்தைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். இராத்திரி ஆறுநாழிகைக்குமேலிறந்துபோனால் விடிந்தபின் மறுநாள்தான் தகனம் செய்யவேண்டும். அப்போது பிரேதத்துக்குத்தோஷம் சம்பவிப்பதில்லை என்று வியாசர் கூறினார். பிரேதத்துக்குத் தீட்டுமுதலிய தோஷங்கள் நேர்ந்தால் வைசானச் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறவிதிப்படி பிராயச்சித்தம் செய்து பின்பிரேத கர்மங்களை ஆரம்பிக்க வேண்டும்.

(தொடரும்.) **சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

---

## தனக்கு மிஞ்சித் தருமம்.

தெய்வத் திருநாடென்னு மிப்பாரத நாட்டின்கண் பண்டைக் காலத்தில் வதிந்திருந்த நமது முன்னோர்கள் விலைமதிப்பற்ற எண்ணரிய பழமொழிகளைத் தமது நுகர்ச்சிமுகத்தாற்கண்டு, விண்டுபோயினர். அவைகளுட் சில தமக்குரிய நிலையினின்றும் மாறுதலுற்று, ஓரெழுத்தேறினுங் குறையினும்



வேறுபொருள் தந்து, நடைமுதலில் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் மேற்குறித்த பழமொழியும் ஒன்றாகும்.

இப்பழமொழியானது "தனக்கு (ம்) மிஞ்சித்தருமம்" என்றிருக்க வேண்டியது: உலகவழக்கில் (ம) கரவொற்று உச்சரிப்பினின்றும் நீங்கிடவே, அது "தனக்கு மிஞ்சித்தருமம்" என்று வழங்கப்பட்டு வருகின்றது. பழைய நூல்களுக்கும் புதியநூல்களுக்கும் பாடபேதம் அளவிறந்திருப்பதை நோக்குங்கால் பழமொழிகள், ஒன்று, மற்றொன்றின் கருத்தாகமாறி வ்ழங்கப்படுவது ஓர் வியப்பன்று!

"தனக்கு மிஞ்சித்தருமம்" என்பதற்கு, "ஒருவன் தனக்கும், தன்னைச் சேர்ந்தவர்கட்கும் வேண்டிய அளவு எதையுஞ் சித்தப்படுத்திக் கொண்டு, அதற்குமேல் எதாகிலும் எஞ்சியிருப்பின், அஃதைப் பிறருக்கீய வேண்டுவதே தருமமென்றிதற்குப் பொருடொனியா நிற்கும். இங்ஙனம் பொருடரும் பழமொழியை மாந்தர்கட்குத் தருமஞ்செய்யப் போதிக்கவந்த பெரியார் கூறியிருப்பாரா? செவ்விய நூல்களை யாராய்ச்சிசெய்த பெரியோர்கள் கூறியுள்ள பழமொழிகளியாவும் அந்நூற்களின்கருத்துக்கும் ஒத்துள்ளன. ஆகவே "தனக்குமிஞ்சித் தருமம்" என்று பெரியார் கூறியிருப்பின் அது மேலோர்களின் நூற் கருத்துக்கு மாறுபடுமன்றோ!

இவ்வுலகத்தில் ஆசையென்பது எவரையும் விட்டபாடில்லை. உலகமெல்லா மொருகுடைக்கீழடங்க, அரசாளும் வேந்தர் வேந்தனும், கடலிலுங் கொஞ்சம் வளைத்து, பண்படுத்தி, அங்கேயும் தனது குடிகளைவதியச்செய்து அரசாள மாட்டோமா? என் றெண்ணுவான். குபேரனுக்கு நிகராகத் திரண்ட நிதிக்குவியல்களைக் கொண்டுள்ள தனவந்தர்களும் செம்பு, வெள்ளிகளைப் பொன்னாக்கும் வித்தையைக் கற்றுக்கொள்ள நினைத்தேங்குவார்கள். இங்ஙனமாக, ஆசையானது தனக்கு அடிமையானவர்களை அவர்களின் கடைசிக்காலம் வரையிலும் படாதபாடு படுத்திவிடுகின்றது.

ஆகவே, ஒருவன் இப்பூமியில்வதியும்வரையில், அவனை ஆசைவிடாதீர்க்க அதன் வயப்பட்டுழன்று, "போதுமென்ற திருப்தி கொஞ்சமுமில்லாமல் அலைகடற்றுரும்பாய் வாடும்போது, அவனுக்குப் "போதும்" என்ற காலம் என்றுபோதரும்? அவனுக்கும், அவனுடைய கிளைகட்கும் வேண்டிய பொருள்களைத்தேடிச் சேமித்து வைப்பதெப்போது? அவர்கட்குப் பொருள் திருப்தியாகி மிஞ்சிவருவதெக்காலம்? அஃதொருநாளும் நிறைவேறாத செய்கையென்றே செப்பலாம்.

கடலில் அலை ஓய்ந்ததூந் தலைமுழுகுவோமென்று காத்திருக்கு மொருவன், எங்ஙனம் அலை ஓயாதொழிய, அவனும் தலை முழுகாதொழிவனோ, அங்ஙனமே, ஒருவன், தனக்கு வேண்டியமட்டும் "போதும்" என்ற நிறைவு நேராதொழிய, தருமஞ் செய்வதற்கும் அதுபோல் நேராதொழியும்;

புல்லின் நுனியிற்றங்கி யொளிவீசும் பனித்துளி கதிரவன் வரவைக் கண்டதும் இருந்த இடந்தெரியாமல் மறைந்து விடுவதுபோலவே ஒவ்வொரு

வருடைய யாக்கையும் நிலையற்றது. ஆதலின் இவ்வுயிர் இருக்கும்போதே ஒவ்வொருவருந் தம்மாற் செய்யக்கூடிய தருமங்களை யிப்பொழுதே செய்ய வேண்டு மென்ற கருத்துத்தோன்ற,

"புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க அறவினை"—என்றும்,

"மற்றறிவாம் நல்வினை, யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ் செய்ம்மின்"

என்றும் நாலடியாரும்,

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க; மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை" என்று வள்ளுவர் நூலுங் கூறியிருப்பதாலும், ஒவ்வொருவரும் இதேநேரத்தில் தருமஞ்செய்தல்வேண்டு மென்பது பெறப்பட்டது. ஆகலின் "தனக்குமிஞ்சித் தருமம்" என்று பழமொழி நிலவுமாறல் அஃது அறிவான்ற மேலோர்களின் நூற்கருத்துக்கு ஒத்துவாராதொழியும், எனவே, அப்பழமொழி, "தனக்கும் மிஞ்சித்தருமம்" என்றே அமைந்திருத்தல்வேண்டும். "தனக்கும் மிஞ்சித்தருமம்" என்பதைப் பற்றி மறுமுறையும் கவனிப்பாம்.

மு. மாணிக்க நாயகர், தமிழாசிரியர், திருப்புவனை, புதுவை.

---

## நாலடியார் வசனம்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 40-ம் அதிகாரம் - காமநுதலியல்.

**(காமவின்பத்தின் பகுதிகளைக் கூறல்.)**

விளங்குகின்ற கடலானது நிலைத்திராமல் அலைகளை அலைக்கின்ற நீண்ட கழிபொருந்திய குளிர்ந்த கரையையுடைய பாண்டியனே! கூடாவிட்டால் சரீரத்தில் பசலையுண்டாகும்; பிணங்கிவருந்தா விட்டால் காமம் இன்பமற்றதாகும்; கூடிப்பிணங்குதல் (காமநுகர்ச்சியில் இன்பம் மிகுதற்கு) ஒருவழியாகும்:—(இது, தலைமகனுக்கு வாயிலில் நேர்ந்த தோழி, தலைமகள் புலவிநீங்கச் சொல்லியது.) பசலை-விசனத்தைக் குறிக்கின்றஒருவகை நிறம். (1)

தம்மிடத்தில் விருப்பமுள்ள நாயகருடைய மலர்மாலை யணிந்த அழகிய மார்பை அழுந்தத் தழுவத்தகுந்த தலைவரைப் பெற்றிராதவர்களுக்கு 'இம்' என்னும் ஒலியோடு மழைபொழியும்படி மேகங்கள் சப்திக்கும் திசையெல்லாம் சாப்பறையடித்தாற் போன்ற தன்மையுடையதாம். (இது, மழைக்காலத்தில் திரும்பிவருவதாகச் சொல்லிப்போன கணவன் குறித்தகாலத்தில் வாராமையால், மனைவியானவள் காலத்தைக்கண்டு சகிக்காமல் வருந்திக் கூறியது.) (2)

கம்மியத்தொழிலைச் செய்யும் கம்மாளர்களுடைய ஆயுதங்களை (வேலை செய்யவொட்டாமல்) அடங்கச்செய்த மயக்கத்தைக் கொண்டிருக்கின்ற



மாலைக்காலத்தில் மலர்களை ஆராய்ந்தெடுத்து அவற்றைத் (மாலையாகத்) தொடுத்துக்கொண் டிருந்தவள். 'கணவரை யில்லாதவர்களுக்கு இம்மாலை என்னபயனைத்தரும் !' என்று கையிலிருந்த மாலையைப் போட்டுவிட்டு அழுதாள். (இது, நாயகனில்லாத காலத்தில் நாயகியிருக்கும் நிலைமையைத் தோழி நாயகனுக்குக் கூறல்.) (3)

பாகனே ! எனது மனைவியானவள் (மாலைக்காலத்தில்) மறையும் சூரியனைப்பார்த்து, சிந்தியவைபோலப் பரவிய சிவந்த ரேகைகளையுடைய கண்களில் நிறைந்துள்ள நீரைத்(தனது) மெல்லிய விரலால் அடிக்கடி எடுத்தெறிந்து அழுதுகொண்டு, தன்னுடைய மெல்லிய விரலால் (நாம் பிரிந்து சென்ற) நாள்களைக் கணக்கிட்டுவைத்து, படுக்கையின்மேல் தோளைவைத்துப் படுத்துக்கொண்டு ஐயோ ! நம்முடைய குற்றங்களை நினைப்பாளோ ! (வேலையை முடித்துத் திரும்பியதலைவன் பாகனைப்பார்த்துச் சொன்னது)(4)

(தோழா ! எனது நாயகியின்) கண்களைப் (பார்த்துச்) சேற்கெண்டை என்னுங் கருத்தினால் அந்தநாயகியின் பின்சென்ற சிச்சிலிக்குருவி யானது, (அவளுடைய) ஒளிபொருந்திய புருவமானது வளைக்கப்பட்ட வில்லைப்போலிருந்ததை யறிந்து (பயந்து), பின்னே தொடர்ந்து சென்றும் (குத்துதற்கு) ஊக்கங்கொண்டு எழும்பியும் குத்துதற்கு முடியாமலிருந்தது; (தலைவியின் கண்ணழகையும் புருவத்தினழகையும் தலைவன் வியந்துகூறியது.) (5)

ஆம்பல் மலரைப்போன்ற வாயையும் அழகிய இடையையு முடைய (எனது) மகளுக்கு செந்நிறம் பொருந்திய செம்பஞ்சுக் குழம்பைத் தடவினாலும் (சகிக்கமுடியாமல்) 'மெல்ல, மெல்ல' என்று பயந்து பின்வாங்கிப் போன பாதங்கள் பருக்கைக் கற்கள் நிறைந்தகாட்டை ஐயோ ! பொறுத்தனவோ ! (தலைவி தலைவனுடன்சென்ற சுரத்தருமை கூறி அவளது நற்றாய் இரங்கியது.) (6)

(தலைவனே ! தலைவி) ஓலையெழுதும் கணக்கருடைய ஓசை அடங்கும் இழிவாகிய செவ்வானத்தையுடைய மாலைக்காலத்தில் (மணம்புரிந்தகணவரை நினைத்துக்கொண்டு பூமாலையை அறுத்தெறிந்து அழகிய மார்பின்மேல் அலங்காரஞ் செய்திருந்த சந்தனப்பூச்சை யழித்துவிட்டு அழுதாள். (தலைவன் பிரிவை ஆற்றாத தலைவியின் நிலைமையைத் தோழி தலைவனுக்குச் சொல்லியது.) (7)

கடந்துபோவதற் கருமையாகிய காட்டில் காளைபோன்ற தலைவரின் பின்னே நாளையதினம் நடந்துபோகவும் வல்லமை பெற்றிருக்கிறாயோ ? என்று என்னைக்கேட்டாய்; பிரயாசமுள்ள வளையலையணிந்ததோழி ! (நான் சொல்வதைக்கேள்) பெரிய குதிரையை அடைந்தவனொருவன் அக்குதிரைமேலேறி நடத்தும் முறைமையையும் கற்றுவல்லவனானான். (அதுபோல, காதலனை யடைந்தபிறகு அவன்பின் செல்வது அருமையல்ல.) (இது, தலைவனோடு போகத்துணிந்த தலைவி தோழிக்குச்சொன்னது.) (8)

(எனதுமகள் நேற்று என்னைத் தன் மார்பிற் பொருந்தும்படி) (என்)

உடல் முழுவதையும் தழுவிக்கொண்ட முறைமையை (அப்போது) நான் அறியவில்லை; எனது அழகிய சித்திரப் பதுமைபோன்ற மகள் என்னைத் தழுவிக்கொண்டதன் கருத்து, மான்கூட்டம் வேங்கைப்புலிக்குப் பயந்துதிரிகின்ற காட்டுவழியில் (தலைவனுடன்) போவதற்குத்தான் போலும். (மகளை அனுப்பிவிட்ட நற்றாய் இரங்கிக்கூறியது.) (9)

தோழீ ! முக்கண்ணனாகிய சிவபெருமானும் காக்கையும் படத்தையுடைய இராகுவென்னும் பாம்பும் என்னைப்பெற்றதாயும் எனக்குப் பிழைசெய்ததுயாது ? (ஒன்றுமில்லை.) பண ஆசையால் (என்) தலைவர் சென்றநெறியே (எனக்குப் பிழைசெய்தது.) (தான் எரித்தமன்மதனை மீட்டும் உயிர்ப்பித்ததனால் சிவனும், குயில்கள் தம் கூட்டில்வைத்தமுட்டை பொரித்த குஞ்சைக்கொல்லாமல் காப்பாற்றியதனால் காக்கையும், விழுங்கும் சந்திரனை மறுபடி வெளிப்படுத்துவதனால் இராகுவும், நான் பிறந்தபோதே என்னைக் கொல்லாமல் விட்டதனால் என்தாயும் எனக்குப் பிழைசெய்தவர்களே யாவர். ஆயினும், என்தலைவர் என்னைவிட்டுப் பிரியாம லிருந்தால் மேற்சொன்ன மன்மதன் முதலானவர்கள் எனக்குத்துன்ப முண்டாக்காமல் இன்பமே தருவார்கள். ஆதலால், அவர்கள் பிழைசெய்ததாகச் சொல்ல நிமித்தமில்லை. தலைவர் பிரிந்துசென்ற நெறியே பிழைசெய்தது, எனத்தலைவிகூறி இரங்குகிறாள்.) (மன்மதனும் குயிலும் சந்திரனும் பிரிந்தார்க்குத் துன்பமும் புணர்ந்தார்க்கு இன்பமும் உண்டாக்குத லறிக.) (10)

**பூ. ஸ்ரீநிவாசன்,** தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

நாலடியார் வசனம் முற்றுப் பெற்றது.

ஓம் தத் ஸத்.

# ஆசாரப்பகுதி.

## நித்திரை.

“ உலகத்தீரே, உலகத்தீரே
நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின், சாற்றக் கேண்மின்:
மனிதர்க்கு வயது நூறல்லதில்லை.

ஐம்பது இரவில் அகலும் துயிலால்;
ஒட்டிய இளமையால் ஓரைந்து நீங்கும்;
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போக நீக்கிருப்பன முப்பதே: ”

கபிலரகவல்.



“ வேதநூற் பிராயநூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகன தாகும். ”

திருமூலர்.

**நாம்** செய்யும் எவ்விதத்தொழிலின் முயற்சிகளினாலும் நம்முடைய மனத்துக்கும் உடம்புக்கும் உண்டாகுந் தூர்ப்பலத்தை நீக்கி நித்திரை நல்ல பலத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது. இதனால் உறக்கம் எல்லோருக்கும் இன்றியமையாதது என்பது வெளிப்படை. சீவனத்தின் பொருட்டுப் பகலில் உழைப்பதும் அவ்வுழைப்பின் அயர்ச்சியால் இரவில் உறங்குவதும் உலகவியல்பு. பகலில் உழைக்கும்போது சில தாதுக்கள் கழிகடை யாகின்றன. அவை இரவில் நாம் அயர்ந்து நித்திரை செய்யும்போது இரத்த வோட்டத்தினால் மறுபடியும் சரிவர நிரம்பி, மறுநாள் தேக உழைப்பிற்கு ஏற்றவையாகின்றன.

நித்திரை செய்தற்குரிய காலம் பகற்கால மன்று; இராக்காலமேயாம். ‘உறங்குவதி ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்’ என்றார் * தேரையர். பகற்காலத்திலே உறங்கினால் பிணிவரும்; மூதேவி குடிபுகுவள்; செய்யவேண்டிய தொழில்களும் செய்யாமையாற் கெடும். இவையன்றி இராநித்திரைகுழம்பித் தூர்க்கனவுகள் காணுவதற்கு ஏதுவாய் பல இன்னல்களை யுண்டாக்கும். ஆதலால் பகற்காலத்திலே ஒருபோதும் நித்திரை செய்யலாகாது. ஆனால், பெரும்பான்மையான மக்கள் இரவில் அரங்கமேடைக் கண்காட்சிச் சாலை முதலிய வேடிக்கைகளை இமைகொட்டாமல் பார்த்துவிட்டுப் பகற்பொழுதில் கும்பகர்ணனைப்போல் தூங்குகிறார்கள். இதனால் சோம்பல் மிகுவதன்றி அற்றை நாட்குரிய முயற்சிகள் யாவும் நடவாமற்போம்.

இரவில் அதிகமாக உறங்குவதும் சோம்பலுக்கும் அதனாலுண்டாகின்ற குற்றங்களுக்கும் பிணிகளுக்கும் காரணமாகும். அதனாலன்றோ “அனந்தலாடேல்” என்றார் ஔவையார். உறங்கும் அளவானது அவரவருடைய தேகநிலைமைக்கேற்ப எழு அல்லது எட்டு மணிநேரம் போதுமானதென்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

“ பொழுதொடு படுத்துறங்கிப் பொழுதொடு எழுவதால் ஆரோக்கியமும் ஆக்கமும் மனத்தெளிவும் உண்டாகும் ” என்பது ஆங்கிலப்பழமொழி. “ வைகறைத் துயிலெழு ” என்பது ஆன்றோர் கூற்று. நள்ளிரவில் விழித்துக்கொண்டு நெடுநேரம் தூங்காம லிருப்பவர்கள், அதிகாலையில் விழித்தெழும் பழக்கத்தைச் செய்வாராயின் அங்ஙனம் நித்திரையின் இடையில் எழாமல் நல்ல நித்திரை செய்வர். மனக்கவலையால் உறக்கம் பிடியாதவர்கள் உறக்கத்தினிமித்தம் மயக்கத்தை உண்டுபண்ணும் பொருள்களை உண்ணலாகாது.

* பதினெண் சித்தர்களில் ஒருவர் - மருத்து.

வயிறுநிறைய உண்டபின்பு, உடனே படுத் துறங்குவதால் அமைதியின்மை முதலிய துர்க்குணங்கள் உண்டாகும். ஆதலின் உண்டபின் குறு நடையாக உலாவிச் சிறிது நேரஞ் சென்றபின்பு படுக்கைக்குப் போதல் வேண்டும். கை கால்களிலுள்ள ஈரத்துடன் உறங்கலாகாது. சீரணமாகாத கடினபதார்த்தங்களை இரவிலே புசிக்கலாகாது. ஒன்றும் உண்ணாமல் பட்டினியாய் உறங்குவதும் ஆகாது. கனவு காண்டல் முதலியன இன்றி மெய்ம் மறந்து உறங்குவதே நல்ல உறக்கமாகும்.

படுக்குமிடம் நல்ல காற்று உலாவத்தக்கதாய், ஜனநெருக்கமில்லாததாய் இருத்தல் வேண்டும். நிலமட்டத்தில் அசுத்தவாயு அளாவியிருத்தலினாலே, தரைமட்டத்துக்கு உயர்வாகக் கட்டில் அல்லது பலகை, அல்லது கயிற்றுக் கட்டில் முதலியவைகளிலே நித்திரைசெய்வது உத்தமம். விடியற்காலத்திலே விழித்தபின்பு மீண்டும் உறங்கலாகாது.

உரிய காலத்தில் நித்திரை வாராவிட்டால் நூல்களைப் படித்தல், இறைவனைத் தியானித்தல் முதலாகிய நல்ல விஷயங்களிலே மனதைச் செலுத்திக் கொண்டிருந்து நித்திரைவரும்போது சயனித்தல் வேண்டும். ஆதலின், இவண் குறிப்பிட்டுள்ளவற்றை நன்காராய்ந்து கடைப்பிடித்து ஒழுகுவோமாக.

தி. பொ. மாணிக்கவாசகம்,
வரகனேரி, திருச்சிராப்பள்ளி.

---

## எண்ணெய் ஸ்நானம்.

எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யும் வழக்கம் மிக்க பழமையானது. இவ்வழக்கம் தமிழராலும் தென்னிந்திய மகமதியராலும் கைக்கொள்ளப்பட்டு வருவது. நமது பழக்கவழக்கங்கள் யாவும் சுகாதார விதிகட்கு உட்பட்டவை. அன்றியும், நமது தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவையாகவு முள்ளவை. ஐரோப்பிய அநாகரீகத்தை அநுசரிப்பவர் பலர் எண்ணெயைச் சாதாரணமாகத் தலையிலிடவும் வெட்கப் படுகிறார்கள். இந்த நிலைமையிலுள்ளவர்கள் எண்ணெய் ஸ்நானஞ்செய்ய ஒருபோதும் விரும்பமாட்டார்களென்பது வெளிப்படை. ஆகவே அறியாமையி லாழ்ந்து அநாகரிகத்தில் வீழ்ந்து சங்கடப்படுகின்ற நண்பர்கட்காக எண்ணெய் ஸ்நானத்தின் உபயோகத்தைப் பற்றிச் சிறிதுகூற வேண்டிய தவசியமெனக் காண்கின்றோம்.

தினமும் காலையில் கொஞ்சம் எண்ணெய் தலையிற்றேய்த்துக்கொள்வதால் தலைவலி கண்ணெரிவு இவைகள் வாராமற்றடுப்பதற் கேதுவாகும். அன்றியும் மூளைக்கும் கண்ணுக்குங் குளிர்ச்சியைக் கொடுக்கும். தலைமயிரும் பற்களும் நல்லநிலைமையி லிருக்கும். வாரமொருமுறை அல்லது இருமுறை பாதாதிகேசம்வரையும் எண்ணெய் நன்றாகத் தேய்த்து வெந்நீரிலோ தண்ணீரிலோ ஸ்நானம்செய்து வருவதால் நல்ல தேகாரோக்கியம் உண்டாகும்; நித்திரைக்குப் பங்கமேற்படாது; முகம் வறட்சியடையாது; தோல் மினுமினுப்பாக இருக்கும்; தலைமயிர் கருமையடைந்து நீண்டுவளரும்; நரம்புகள் முறுக்கேறும்; இரத்தோட்டம் அதிகரிக்கும். சோம்பற்றனம் நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும். உஷ்ணபூமியி லிருப்பவர்களுடைய தேகம் இயற்கையாக அதிக வறட்சியும் சூடும் பொருந்தியிருக்கும். ஆதலினால் நாம் எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. பெருமலைகளை யுடைய சீதள பூமியில் வசிப்பவர்கள் இவ்வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.



பகல் முழுவதும் தேகத்தை வருத்திப் பாடுபட்டுழைத்துச் சீவிக்கும் விவசாயிகளும் தொழிலாளரும் தேகச்சூட்டைத் தணித்துக் கொள்வதற்காகவும் இளைத்த அவயவங்கள் பலப்படுவதற்காகவும் வாரமிருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டிய தவசியம். தண்ணீரைவிட வெந்நீரே இதற்கு மிகவும் உகந்தது. வெந்நீரிற் றோய்த்துப் பிழிந்ததுணியினால் உடம்பு முழுவதையும் தேய்த்து சுத்திசெய்துகொண்டு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது தேகாரோக்கியத்திற்கு மிகவும் நன்றாம்.

இனி, அநேகர் காலை போஜனமருந்திய பின்னரும் உச்சிப்பொழுதிலும் மழையில் நனைந்த பின்னரும் எண்ணெய் ஸ்நானம் செய்கின்றனர். இங்ஙனம் கண்மூடித்தனமாக நடந்துகொள்வதால் பெரும்பாலும் நோய்வாய்ப் படுகின்றனர். எண்ணெய் ஸ்நானத்திற்கு உரியவேளை அதிகாலையாகும். காலையில் ஸ்நானம்செய்ய வசதியற்றவர் மாலையில் செய்துகொள்வது நன்று. அன்றி உச்சிப்பொழுதில் எண்ணெய் ஸ்நானம் செய்வது ஒருபோதும் உதவாது. எண்ணெய் ஸ்நானம் செய்தகாலங்களில் தேகத்திற்குக் கூடிய அளவு ஆறுதல் கொடுக்க வேண்டும். அன்றையதினம் அதிகம் புசிப்பதும், அதிக சூடான அல்லது அதிககுளிர்ச்சியான உணவுகளை யுட்கொள்வதும் கலவி செய்தலும் ஆகாவாம்.

("தமிழர்போதினியி" லிருந்தெடுத் தெழுதப்பட்டது.)

அ. ச. அருணாசல ரெட்டியார்.

## விவசாயப்பகுதி.

(30-ம் பக்கத் தொடர்ச்சி.)

## விவசாயம் குறையக் காரணம் என்ன?

நம் நாட்டில் எங்குப்பார்த்தாலும் விவசாயத்திற்கு ஏற்றநிலங்களும், ஆறுகளும் நிறைந்திருக்கின்றன. விவசாயத் தொழிலுக்கு வேண்டிய கால்நடைகள் நம் நாட்டில் ஏராளமாக இருந்து வருகின்றன. [illegible] பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. [illegible] கிராமங்களில் இருந்துவந்தவர்கள் முக்கியமாக [illegible]த்தொழிலையேசெய்து வந்தார்கள். அப்படிப்பட்ட கிராமங்களின் நிலைமை இப்பொழுது எப்படி இருந்துவருகின்றதென்பதை நாம் சற்று ஆராய்வோம்.

1698 41
[illegible] 600 008

மேனாட்டு நாகரீகம் நடையுடைபாவனை முதலியவைகள் நம் நாட்டில் என்று தலைகாட்டுவதற்கு ஆரம்பித்தனவோ அன்றுமுதல் நம்நாட்டிற்கு இந்த எளியநிலைமை ஏற்பட ஆரம்பித்ததென்றே கூறலாம். கிராமங்களில் விவசாயத்தொழிலில் கவனம்செலுத்தி உழைத்து வந்தவர்கள் தங்களது பிள்ளைகளுக்கு மேனாட்டுக் கல்விபோதிக்க ஆசைகொண்டு தங்களது நிலங்களையெல்லாம் குத்தகைக்கு விட்டுவிட்டு நகரங்களில் வந்துகுடியேறுவதற்கு ஆரம்பித்தார்கள். அதிலிருந்தே நமது நாட்டின் விவசாயமும் கைத்தொழில்களும், குறைவுபட ஆரம்பித்தன. கிராமங்களில் வசித்து வந்தவர்கள் நகரங்களுக்குச் சென்று குடியேறியதனால் அனேகம் சிறந்தகிராமங்கள் பாழடைந்து விட்டன. அதிலிருந்தே நமது நாட்டில் விவசாயமும், கிராமத்தொழில்களும் குன்ற ஆரம்பித்தன. குத்தகைக்கு நிலங்களை வாங்கியவர்கள் சொந்தக்காரர்களைப்போல் கவனமாக அவைகளுக்கு எருமுதலியவைகளைப்போட்டு விவசாயத்தை அபிவிருத்திசெய்யாமல் தங்கள் இஷ்டப்படி விவசாயத்தைநடத்த ஆரம்பித்து விட்டனர். நாட்டில் விளைந்த பொருள்களும், தான்யங்களும் நம் நாட்டவர்களால் ஏராளமாக அன்னியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நாட்டிற்கு வேண்டிய தானியங்கள் கிடைக்காததனால் நம் நாட்டுமக்கள் பஞ்சத்திற்கும், பசிப்பிணிக்கும் ஆளானார்கள். நம்நாட்டிற்கு வேண்டிய தானியங்களை வைத்துக்கொண்டல்லவா நாம் தான்யங்களை மற்றநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும் ? நாட்டவர்கள் நாட்டின் நன்மையைக் கவனிக்காமல் மேல்நாட்டார் கொடுத்த பணத்தையே பெரிதும் மதித்துத்தங்களது காரியங்களைச் செய்துவந்தனர். மணிலாக் கொட்டை, சணல், கரும்பு, பருத்தி முதலிய பொருள்களை மேல்நாட்டார் அதிகமான தொகைகொடுத்து வாங்குவதைக் கண்டு நம் நாட்டு மக்கள் நெல், கோதுமை சாகுபடிசெய்யக்கூடிய நஞ்சைநிலங்களி லெல்லாம் கரும்பு, மணிலாக்கொட்டை, சணல், பருத்தி முதலியவைகளை ஏராளமாக இதுபோழ்து சாகுபடிசெய்து வருகின்றனர். நாட்டில் விளைகின்ற நெல், கோதுமை முதலிய உணவுப்பொருள்கள் இதுபோழ்து நாட்டின் தேவைகளுக்கே போதாமலிருக்கின்றன. ஆயினும், நாட்டுமக்கள் நாட்டின் நலங்கருதாமல் அந்தநெல்லையும் கோதுமையையும் வெளிநாட்டவர்களுக்கே விற்று வருகின்றனர். இப்படிக் காரியங்கள் நாட்டில் நடந்துவருகையில் நாட்டில் பஞ்சமும், பசிப்பிணியும் ஏன் ஏற்படா ? நாட்டிலுள்ளவர்களில் பெரும் பான்மையோர் போதிய உணவின்றி மிகவும் கஷ்டமான வாழ்க்கையை நடத்திவருகின்றனர். பலர் கஷ்டந்தாங்க முடியாமல் வெளிநாடுகளிலுள்ள கரும்புத் தோட்டங்களுக்கும், தேயிலைத் தோட்டங்களுக்கும், ரப்பர் தோட்டங்களுக்கும் கூலிகளாகச் சென்று அங்கு தாங்கொணாத கஷ்டங்களை அனுபவித்து வருவதை நினைக்கையில் [illegible]பதறுகின்றது. [illegible]வருஷம் நமது விவசாயத்திற்கு மிகவும் அவசியமாக இருக்கின்ற கா[illegible] பல ஆயிரக் கணக்கானவைகள் வெளிநாடுகளுக்கு நமது நாட்டவர்களா[illegible]ற்றி அனுப்பப்படுகின்றன. பணத்தின் பொருட்டு தோலுக்காக வருஷாவரு[illegible]ம் நமது நாட்டில் கொல்லப்படுகின்ற



கால்நடைகளின் தொகை அளவிடக்கூடியதல்ல. இதிலிருந்து நமது நாட்டின் உண்மையான நிலைமை நன்குவிளங்க வில்லையா ?

கிராமவாசிகள் இனியாவது உண்மை நிலையை அறிந்து நாட்டின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு முற்படவேண்டும். நாட்டின் தேவைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யெல்லாம் அவர்கள் சாகுபடி செய்யவேண்டும். நாட்டின் தேவைக்கு வேண்டியவைகளை வைத்துக் கொண்டு மிஞ்சிய தான்யங்களைத்தான் அவர்கள் மற்றநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். நமது விவசாயத்திற்கு அவசியமான கால்நடைகளை நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது. பணத்திற்கு ஆசைப்பட்டுத் தோலுக்காக அவைகளைக் கொல்லவும் கூடாது. நமது நாட்டில் கால்நடைகள் அபிவிருத்தி யடையும்படி செய்யப்பட வேண்டும். விவசாயத்திற்கு வேண்டிய எரு முதலியவை போட்டுக் கிராமவாசிகள் அத்தொழிலை முன்போல் நன்கு அபிவிருத்தி அடையும்படி செய்தல் வேண்டும். நமதுநாட்டிலுள்ள கிராமங்கள் முன்போல் சீர்திருத்தப் பட்டாலன்றி நம் தாய்நாடு பண்டைப் பெருமையை அடையவே முடியாது. இதை அறிந்தே நம்நாட்டுத் தலைவர்கள் “ **கிராமங்களுக்குச் சென்று அவைகளைச் சீர்திருத்துங்கள்** ” என்று வற்புறுத்தி வருகின்றனர். எனவே இதிலிருந்தாவது கிராமவாசிகள் தங்களது கடமையை நன்கு உணர்ந்து தங்களது காரியங்களைச் செய்வதற்கு முற்படுவார்களாக.

உபகாரி.

## சுயமொழிப்பகுதி

### தாய் மொழியின் உரிமை.

நந்தாய் மொழியெது ? எந்தத்தாய் மொழிக்கும் உரித்தான உரிமைகளெவை ? அவ்வுரிமைகளை நந்தாய்மொழி பெற்றுள்ளதா ? இவை போன்ற வினாக்களுக்கு விடையிறுத்தலே இச்சிறு கட்டுரையின் உட்பொருள். நம் தாய்மொழி யெதுவென்று எனது நாட்டினரும் எனது மொழியாளருமாகிய தமிழரையே கேட்கின்றேன். தமிழரென்று என்னால் எண்ணப்படுவாருள் சிலர், ‘ எம் தாய்மொழி யெதுவென்று அறிகிலேம் ’ என்கின்றனர்; சிலர் ‘ எமது தாய்மொழி தமிழ் ’ எனச்சொல்ல நாணுகின்றனர்; சிலர் தமது தாய்மொழி ஆங்கிலமெனப் பிறர் எண்ணுமாறு நடிப்பதில் விருப்புக்காட்டு கின்றனர். பலர்தமது, தாய்மொழி தமிழே யென்று ஆங்கிலத்தில் எனக்கு விடையளித்து உண்மையில் அவர் தாய்மொழி ஆங்கிலந்தானோ வென்று யாவரும் ஐயுறுமாறு நடிக்கின்றனர். என்னே ! இவ்வலங்கோலக் காட்சி ! எங்கும் பரதேசிக்கோலம் ! இந்தியமக்கள் அந்நிய நாட்டினரே போல் தோன்றுகின்றனர். உடையில் அந்நியர்; நடையில் அந்நியர்; மொழி

யிலும் அந்நியர்; எவ்வழியிலும் அந்நியர். ஆதலின், இவரை ஆள்வதும் அந்நியர்.

தமிழ் நாட்டாரே! நீங்கள் தமிழர் என்பதை உணருங்கள். நீங்கள் இங்கிலாந்தில் பிறக்கவில்லை யென்பது உண்மை. நமது தாயும் தந்தையும் தமிழர்களே. பெற்றதாயின் பெயரையும், பெற்றதந்தையின் பெயரையும் சொல்வதற்கு வெட்கமா? தமிழ்மகன் பிறமகன்போல் நடிப்பதன்றோ வெட்கம்! இழிவு! தமிழ்மகன் அந்நியனைப்போல் நடிப்பதைக் காணவும் நாணுங்கள். இனிய தமிழில் ஒன்றும் கற்காது தமிழைக் குறைகூறித் திரிபவர்களைப்பற்றி நாம் என்னகூறலாம். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலக்கண இலக்கியங்கள் நிரம்பப்பெற்றிருந்த வளம்பொருந்திய மொழியன்றோ நமது தமிழ்மொழி! இயற்கைவாழ்வு நடாத்தி இயற்கையின்பந்துய்த்த இயற்கைப்புலவர் இயற்றிய பாக்கள் அடங்கிய நமது பண்டைத்தமிழ் இலக்கியங்களின் பெருமையுணராதார் தமிழைக் குறைகூறுவதைக் காண என் மனஞ்சகிக்க வில்லை. தமிழ்த்தாய் தனது உரிமையனைத்தும் இழந்து தவிக்கின்றாள். அவள் தனது உரிமையைப் பெறுமுன்னர், நாம் நமது உரிமையைப் பெறுவதெங்ஙனம்?

எந்தத்தாய் மொழிக்கும் உள்ள உரிமைகள் எவை? தாய்மொழி யெதுவும் அம்மொழியாளரால் பேசப்படுதல் வேண்டும். நாம் பேசாத மொழியைத் தாய்மொழி யென்பதற்கு நியாயம் இல்லை. வழக்காறற்ற மொழியால் பெரும் பயன் விளையாது. எந்நாட்டினரும் தமது தாய் மொழிவாயிலாகவே தம் கருத்துக்களைத் தெரிவித்தல் வேண்டும். இந்த உரிமையை நமது தாய் இழந்து வருகிறாள். தன்மக்கள் அந்நியபாஷை பேசுவதில் அவாவுடையராகி வருகின்றதை அதிசயமாகக் காண்கின்றாள்; பிறமொழி பயிலாதாரேனும் தன்னை ஆதரிப்பரென்றெண்ணி அவர்களை நோக்குகின்றாள்; அவர்களும், அந்நியமொழிகளை ஆபாச உச்சரிப்புடன் தமிழில் புகுத்திப்பேசி, அதனையே சிறப்பென்று கருதுவதையும் பார்க்கிறாள். "சட்டசபைகள், நகரசபைகள், கலாசாலைகள் இவைகளிலேதான் நம்மைத் தோன்றவிடாது வெருட்டுகின்றனரே; பொதுக்கூட்டங்களுக்கேனும் செல்வோம்" என்று அங்குப் போகிறாள். அங்கும் அவள் தோற்றம் வெறுக்கப்படுகிறது. தமிழரே கூடியுள்ள சபைகளிலே அந்நியபாஷையால் பேச்சு நிகழ்கின்றது. இந்த இயற்கைக்கு மாறுபட்ட செயலை இந்தியர் நீங்கலான ஏனையநாட்டினர் இழிவெனக் கருதுகின்றனர். இந்நாட்டிலேதான் (சிறப்பாகத் தமிழ்நாட்டிலேதான்) இந்த இழிவான செயல் கௌரவச் செயலாகக் கருதப்படுகிறது. தமிழன்னைக்கு வீடுகளிலும் இடமில்லை. வீதிகளிலும் இடம் இல்லை. பரிதாபம்! பரிதாபம்!!

இதனால் ஆங்கிலங் கற்பதையோ, ஆங்கிலேயருடன் அம்மொழியில் உரையாடுவதையோ, இழிவெனக் கூறுகின்றேனில்லை. ஆங்கிலம் தற்கால நிலைக்குரியமொழி; அதனைக் கற்பது தவறன்று. ஆனால், நம்மவர்களுக்குள் தாய்மொழியே பேசப்படும் மொழியாதல் வேண்டும். ஆங்கிலேயர் பிறமொழிகள் பலவற்றில் பயிற்சிபெற்றாலும் தமது மொழியிலேயே பேசுகின்றனர்.



நமது நாட்டிலோ ஆங்கிலம் சற்றும் தெரியாவிடினும், யாரிடத்திலாவது கேட்டு அப்பாஷையில் கையெழுத்திடக் கற்றுக்கொள்கின்றனர். ஒரு ஆங்கிலேயன் தமிழில் எவ்வளவு புலமைபெறினும், தமிழில் கையொப்பமிடுவானோ? அவன் ஒருநாளும் தனது சுயமரியாதையை இழந்து அவமரியாதை யடைய மாட்டான். தமிழனுக்கோ ஆங்கிலத்தில் கையொப்பமிட ஆவல் மிகுதி. ஐயோ! நமது பாஷை கையெழுத்துப் போடுதற்கும் தகுதியற்றதாகவோ போயிற்று.

இவைகளெல்லாம் தமிழ்மொழியின் மாண்பறியாதார் செயல்களே யெனக் கூறுவதற்கில்லை. தொல்காப்பியங்கற்ற பண்டிதர்களுங்கூடத் தமிழை அவமதிக்கின்றனர் என்றே கூறுவேன். புலவரும் தமிழில் கையொப்ப மிடுவதை அநாகரீகமெனக் கருதுகின்றனர்; தமிழில் பேசுவதை இழிவென்றெண்ணுகின்றனர். தாங்கள் எழுதும் தமிழ்நூல்களின் முன்பக்கங்களை ஆங்கில எழுத்துக்களால் நிரப்புகின்றனர். தமிழ்நூல்கள் ஆங்கில அட்டைகளுடனும், ஆங்கில முகவுரைகளுடனும் வெளிவருகின்றன. புலவர் செயல்களை நோக்கும்போது தமிழுக்கு உய்வுகாலம் சமீபத்திலில்லையென்றெண்ண வேண்டியிருக்கிறது. தமிழில் கடிதம் எழுதுவது அநாகரீகம் என்று கருதப்படுகின்றது.

தமிழன்பர்களே! தமிழருக்குச் சுயமரியாதை கற்பிக்க எழுங்கள். தமிழன்னை தனது உரிமையையே கேட்கின்றாள். நமது தாய் மொழிக்கு உரித்தான உரிமைகளை நல்குவது தமிழ் மக்களாயுள்ள நமக்கு இன்றியமையாத கடனாகும்.

ஆ. அருள் தங்கையா.

## மாணவர்பகுதி.

### ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(33-ம் பக்கத் தொடர்ச்சி.)

### "வஞ்சகம் பேசேல்"

"**வஞ்சகம்**—கபடமான வார்த்தைகளை, பேசேல்—(நீ) பேசாதே" என்பது இதன்பொருள்.

ஒருவன் பிறரிடத்துப் பேசுங்காலத்தில், மனத்திலுள்ளதை மறைக்காமல் உள்ளபடி வெளியிட்டுப் பேசவேண்டும். அங்ஙனம் பேசுவார்க்கு எவ்விடத்தும் நன்மதிப்புண்டு; சௌக்கிய மேற்படும். அவர் ஒரு சமயம் ஒருவர்க்குக் குற்றம் புரியினும் அவரால் அத்தவறுதல் மன்னிக்கப்படும். அவர் செய்யும் காரியங்களில் எப்பொழுதும் வெற்றி யடைவர்; விரும்பியதைப் பெறுவர்; மனச் சஞ்சலமின்றி மகிழ்ச்சியுற்று வாழ்வர். இவரைப்போல் வஞ்சனை

யற்ற வார்த்தைகளைப் பேசாமல் மனத்திலொன்றும் வாக்கிலொன்றுமாகக் கபடம்பொருந்திய சொற்களைப் பேசுவோர், பலராலும் "கபடிகள், பொய்யர்" என்று இகழப்படுவர்; அவர்கள் எவ்வளவுதான் ஒன்றை உள்ளே மறைத்துக்கொண்டு பேசினாலும் அவர்களுடைய கபடச்செய்கை சில தினங்களிலேனும் வெளிப்பட்டுவிடும்; அறிவுடையார்க்கு அவர்கள் பேசும்பொழுதே முகக்குறியால் அது வெளியாகிவிடும். அதனால் அவர்களை எவரும் நல்லோராக மதிக்கமாட்டார்கள்; அவர்களுக்கு எவ்வித நன்மையும் புரியமாட்டார்கள்; எல்லோரும் விரோதிகளாவர்; பலராலும் அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள்; இம்மை, மறுமை இரண்டிடங்களினும் சுகம்பெறமாட்டார்கள்.

வஞ்சகம் பேசுவோருடைய இயல்பு இப்படியிருந்தும் உலகத்தில் பலர் அக்குணத்தை விடுவதில்லை: சிலர் கௌரவமடையக் கருதியும், சிலர் பிறரை ஏமாற்றும் பொருட்டும், சிலர் பகை குறித்தும், சிலர் விவேகமின்றி வீணாகவும் மனத்திலொன்றை மறைத்துவைத்துக்கொண்டு வெளியிலொன்றுபேசி வெட்கமுந் துக்கமு மடைகின்றார்கள். அத்தகையினருள் ஒருவர் கதையை இதனடியில் குறிப்பிட்டு இதன் இயல்பினை விளக்குவாம்:—

ஒரு கிராமத்தில் அற்ப புத்தியுடைய வாலிபனொருவனிருந்தான். அவன், எப்பொழுதும் எவ்விடத்தும் கபடமான வார்த்தைகளையே பேசிவருவான்; அவனிடத்தில் வேற்றூராரொருவர், "தாங்களிருப்பது எந்த ஊர்?" என்று கேட்டால், அவன் தன்னுடைய ஊரின் பெயரைச் சொல்லாமல் மற்றொரு ஊரின் பெயரைச் சொல்லுவான்; அவனுடைய ஜாதியைக் கேட்டால், தன் குலத்தை மறைத்து வேறொரு குலத்தைக் கூறுவான். அவன் பசித்திருக்கும்போது, அவனுடைய சுற்றத்தாரொருவர் அவனைப்பார்த்து, 'கொஞ்சம் உண வருந்துகிறீரா?' என்று கேட்டால், அவன் உடனே அதற்கிணங்கிவிட்டால் தன்னுடைய பெருமை கெடுமென்று நினைத்துப் பசியையும் அடக்கிக்கொண்டு, 'எனக்குப் பசியில்லை' என்று சொல்லிவிடுவான்; இப்படியே அவன் ஒவ்வொரு காரியத்திலும் பேசுவது வழக்கம். இந்த வழக்கத்தை வைத்துக்கொண்டிருப்பதே தனக்குப் பெரிய புத்திசாலித்தனமென்று அவன் தற்பெருமைகொண் டிருந்தான்.

அவனுக்கு அடுத்த வூரில் மாமியார் வீடிருந்தது. ஒருசமயம் அவன் மாமியார் வீட்டிற்குப் போயிருந்தான். அப்போது ஒருநாள் அவனுடைய மாமியார் எள்ளை வறுத் திடித்து அதனுடன் வெல்லம் சேர்த்து ஒருவித உண்டைப் பலகாரம் செய்தாள். அவளுடைய புத்திரன், தன் வீட்டிற்கு விருந்தினனாகவந்த மைத்துனனுக்கு அந்த எள்ளுப் பலகாரத்தில் கொஞ்சம் கொடுத்தான். அது மிக்க மணமாயிருந்தபடியால், விருந்தினனுக்கு அதைத் தின்ன அதிக விருப்பமுண்டாயிற்று. எனினும் அவன், தான் அந்தத் தின்றால் அங்குள்ளவர்கள் தன்னை நாகரீகமில்லாதவனென்று பரிகசிப்பார்களென்றும், தான் மிகுந்த நாகரீகமுள்ளவனாகக் காட்டிக்கொள்ளவேண்டுமென்றும் நினைத்து, ஆசையை மனத்தில் அடக்கிக்கொண்டு, மைத்துனனிடத்தில், "இந்த அநாகரீக எள்ளுண்டையை நான் தின்னமாட்டேன்" என்று சொல்லி அதை மறுத்துவிட்டான். அங்குள்ளவர்கள், "இவர் நாகரீகமுள்ளவராகையால் இதைத்தள்ளிவிட்டார்" என்று, அதனைத் தின்னுமாறு அவனைக் கட்டாயப்படுத்தாமல் விட்டுவிட்டார்கள்.



அதன்மேல் அன்றிரவு தீபம்வைக்கும் நேரத்தில் அவ்விருந்தினன் வெளியிற்சென்று திரும்பிவந்தான். அப்போது நடையில் வெளிச்சமில்லாமல் இருட்டாயிருந்தது. அங்கே எள் இடிக்கப்பட்ட உரல் இருந்தபடியால் எள்ளின் மணம் கமகமவென்று வீசிக்கொண்டிருந்தது. அங்கே அவன் வந்ததும் அந்த வாசனை நாசியைத் துளைத்தபடியால், அதில் மிக்க ஆவல்கொண்டு "அடடா! மைத்துனன் அதைக் கொடுத்தபோது நாம் தின்னாமல் விட்டுவிட்டோமே; இப்போது எள்ளிடிக்கப்பட்ட இந்த உரலையாவது நக்கி ஆசையைத் தணித்துக்கொள்வோம்" என்று உடனே உரலில் தலையை நுழைத்துக்கொண்டு நக்கினான். அத்தருணத்தில் அவனுடைய மைத்துனன் அங்கே வந்தபடியால், அவன் குனிந்திருந்த தோற்றத்தை நாயென்று நினைத்துச் சந்தடிசெய்யாமல் ஒரு தடியை யெடுத்து அதனால் ஓங்கி அவன் முதுகில் ஓர் அடி அடித்தான். "அவன் "ஐயோ!" என்று கத்திக்கொண்டு நிமிர்ந்தான். அடித்தவன், தன் மைத்துனனே அடிக்கப்பட்டான் என்று அவனுடைய செய்கையையும் உணர்ந்து ஒரு பக்கம் சிரிப்பும், மற்றொருபக்கம் விசனமுங் கொண்டு அவனுக்குப் பரிவான வார்த்தைகளைக்கூறி அவனை உபசரித்தான். பின்னர், அடியுண்டவன் அதுமுதல் கபடவார்த்தை கூறுவதைவிட்டொழித்தான்.

(தொடரும்.)

செம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை.

## ஞானப்பகுதி.

### பகவத்கீதை வசனம்.

(38-ம் பக்கத் தொடர்ச்சி.)

பகவான் கூறுதல்:—ஏ! கௌந்தேய! பிரஹ்ம ஞானத்தின் கடைசி முடிவு எதுவோ, பிரஹ்ம ஞான சித்தியை யடைந்தவன் எங்ஙனம் பிரமத்தை யடைவானோ அந்த விதத்தைச் சம்க்ஷேபமாக என்னிடத்தினின்றும் தெரிந்து கொள்.

பரிசுத்தமான நிச்சயத்தோடு கூடினவனாகவுந் தைரியத்தாலே புத்தியை விஷயங்களினின்றும் அடக்கியுஞ் சப்தமுதலிய விஷயங்களை விட்டும் ராகத் துவேஷங்களை விலக்கியும், தனித்தோர் இடத்தில் வசிப்பவனாகவும், மிதமான ஆகாரம் உட்கொள்ளுபவனாகவும், மனவாக்குக் காயங்களை அடக்கினவனாகவும், சதாகாலமும் நிஷ்டையில் ஆவலுடையவனாகவும், விஷய வைராக்கியத்தைக் கொண்டவனாகவும், அகங்காரத்தையும் துராக்கிரகம் அல்

லது பிடிவாதத்தையும், துர்மார்க்கத்திற் பிரவிர்த்தியையும், ஆசையையுங் கோபத்தையும் அபிமானத்தையும் ஒழித்து மமதையற்றவனாகவும் ஒழிவடைந் தவனாகவும் இருக்கின்றவன் பிர்மமாவதற்கு அல்லது பிர்ம ஞானத்திற்கு அல்லது பிர்மம்போலாவதற்கு யோக்கியனாக விருக்கிறான்.

தன் மனதைப் பிர்மத்தினிடத்தில் வைத்தவனாகவும் சாந்தமான மனமுடையவனாகவு மிருக்கின்றவன் விசனமடைவது மில்லை; விருப்பமுறுவது மில்லை; எல்லாப் பிராணிகளிடத்திலும் சமத்துவம் பாராட்டி யிருந்து கொண்டு உத்கிருஷ்டமான எனது பக்தியைப் பெறுகிறான்.

நான் உண்மையாக எவ்வித பரிமாணமுடையவனாகவும், எவ்வித சொரூபமுடையவனாகவும் இருக்கின்றேனோ அவ்விதமாக வுணர்கின்றான். பின்னர் என்னை உண்மையாக வுணர்ந்து, உணர்ந்தவுடனே பிரவேசிக்கின்றான்.

இந்த சுலோகத்திற்கு சங்கரர், "மாயை முதலிய எந்தெந்த உபாதிகளோடு பகவான் கூடியிருக்கின்றானோ, உபாதியற்றதாகவும், அகண்ட மாகவும், ஞான சொரூபியாகவும், சர்வ வியாபியாகவுமிருக்கின்ற பகவான் எவ்வித சொரூபமுடையவனா யிருக்கின்றானோ அவ்விதமாகத் தெரிகின்றான்; இதிலுள்ள சில பதங்களால் ஞானமடைந்து அதற்குப் பின்பு பிரமத்திற் பிரவேசிக்கின்றானென்று அர்த்தமாகின்றது போலத் தோற்றும். ஞானத்திற்குப் பலன் அவித்தை நிவர்த்தியே. அதற்குப்பின்பு அடையவேண்டியதா யொன்று மில்லை; பதின்மூன்றாவது அத்தியாயம் சுலோகம் மூன்றில் க்ஷேத்திரக்ஞன் அகண்ட பிர்மமாகச் சொல்லப்பட்டிருக்கிறான். ஜீவனென்னும் பெயரையுடைய தானே அந்த அகண்ட பிர்மமாகலால் அவன் அடையவேண்டுவ தொன்றுமில்லை. வேறொன்றிருந்தாலன்றோ அதை அடைகின்றா னென்று சொல்லக்கூடும். அடைகிறதென்றால் அவித்தியா நிவர்த்தியை யடைவது தான். அதுதான் பிர்மத்தை யடைகிறதென்று சொல்லப்படுகிறது. (சுண்ணாம்பின் சொரூபத்தால் சுத்த ஜலம் சுண்ணாம்பு நிறமாகக் காணப்பட்டபோது சுண்ணாம்பு ஜலமென்று விவகரிக்கப்பட்டது. பிரிக்கின்ற சாதனத்தால் சுண்ணாம்பு நீக்கப்பட்டபோது ஜலம் சுத்தத்தை யடைந்ததென்று விவகரிக்கப்படுகின்றது. சுண்ணாம்பு நீங்கியபின்பு அந்த ஜலம் எதைப்போ யடைந்தது. சுண்ணாம்பு ஜல மென்னும் விவகாரம் நீங்கியதென்பதே ஜலம் சுத்தத்தையடைந்த தென்றமையால் சொல்லப்படுகின்றது. அவ்வாறு) அவித்யாவஸ்தையிலிருந்த பிரமம் ஜீவனென்று விவகரிக்கப்பட்டது. அவித்தை நிவர்த்தியானால் பிரகாசமான ஜீவசொரூபம் சுயம் பிரகாசமாகவே யிருக்கின்றது. இந்த அத்தியாயம் சுலோகம் 50-ல் ஞான நிஷ்டையால் பிரமத்தை யடைகின்றானென்று சொல்லப்பட்டிருக்கிறதே யென்றால், அங்கு மிவ்வர்த்தந்தான் கொள்ளத்தக்கது. நிஷ்டை இத்தன்மையதென்று தெரிந்து கொள்ளுதலால் அஞ்ஞான நிவர்த்திக்குச் சாதகமுண்டு. குரு உபதேசித்த சாஸ்திர ஞானத்தாலுண்டானதும் அமானித்துவம் முதலிய குணங்களோடு கூடியதும், ஆத்மாவைத்தவிர வேறு யாதொரு வஸ்துக்களுந் தோன்றாமல் தானே



பிரமமென்னும் நிச்சயத்தோடிருக்கின்றதுமான திடமாகிய அகண்டத்தியானம் யாதோ அதுதான் ஞான நிஷ்டையென்று கூறப்படுகின்றது. அத்:7-சு: 16-ல் கூறிய நான்குவித பக்திகளில் நான்காவதான ஞானபக்தியே சிரேஷ்டமாயது. இதுவே ஞான நிஷ்டை. இதுவே ஜீவேசுரபேதத்தை நிவர்த்தித்தற் குரியது. இதுவே முடிவான பிரமஞானம். இத்தன்மையான ஞானிக்கே சர்வகன்ம சந்நியாசஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இவனுக்கே ஆத்ம சொரூபமாகிய மோக்ஷம் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கு இதை விட வேறு மார்க்கமில்லை. வேறிருப்பதாக நினைத்தால் மேலைக்கடலை யடைய விரும்பிக் கிழக்கே போவதுபோலப் பயன்படாது. இங்கு சொல்லிய ஞான நிஷ்டாமார்க்கம் ஒரு மலைபோலிருக்கின்றது. இதர மார்க்கம் கடுகு போ லற்பமாகும். ஆதலால் பிரம சொரூபமாய் விளங்குவது என்பதுதான் தாற்பரியம்" என்றனர்.

பகவான் கூறுதல்:—ஏ! அர்ச்சுன! நித்திய நைமித்தியங்களாகிய சகல கருமங்களையும் எப்போதும் புரிகின்றவனும், என்னையே ஆசிரயித்தவனுமாகியவன் எனது அனுக்கிரகத்தினாலே என்று முள்ளதும் அழிவில்லாததுமான பதவியை யடைகிறான்.

சகல கருமங்களையும் மனத்தாலே என்னிடத்திற் சமர்ப்பித்து அடைய வேண்டிய உத்தமஸ்தானமாக என்னையே கொண்டு, நிச்சயபுத்தியை யடைந்து (சரணாகதியடைந்து) எப்போதும் என்னிடத்திலேயே சித்தத்தை வைத்தவனாகவும் ஆகக்கடவாய்.

என்னிடத்திலே மனத்தையுடைய நீ எனது அநுக்கிரகத்தாலே சகல துக்கங்களையும் அதிக்கிரமிப்பாய்; நானே தெரிந்தவன் என்னும் அகங்காரத்தாலே நான் சொல்லியதைக் கேளாவிடின் அல்லது கவனியாவிடின் கெட்டுப் போவாய்.

ஒருவேளை அகங்காரமுற்றுப் போர்புரிய மாட்டேனென்று நிச்சயங் கொள்வாயாயின் இந்த உனது நிச்சயம் பொய்யாம். பிரகிருதி (ரஜோகுணரூபமாகப் பரிணமித்து) உன்னை (யுத்தத்திற்) பிரவிருத்திக்கும்படி செய்யும்.

ஏ! கௌந்தேய! பூர்வகர்ம சேஷத்தாலுண்டாயதும் உனது சுதர்மமாயதுமான சௌரிய முதலிய கருமத்தாலே கட்டுப்பட்ட நீ அவிவேகத்தாலே எந்த யுத்தத்தைச் செய்தற்கு விரும்பவில்லையோ அந்த யுத்தத்தையும் பராதீனனாகவே செய்யப்போகின்றாய்.

ஏ! அருச்சுன! எந்திரத்திலேறிய வஸ்துபோலச் சகல பிராணிகளையும் தமது சக்தியாலே கருமங்களிற் பிரவிர்த்திக்கும்படி செய்து கொண்டு ஈசுவரனானவர் சகல பிராணிகளின் இருதயத்திலிருக்கின்றார்.

ஏ! பாரத! தேகேந்திரியாதிகளால் அந்த ஈசுவரனையே சரணமாக அடை. அந்த ஈசுவரானுக்கிரகத்தாலே உத்தமமான சாந்தியையும், சாசுவதமான ஸ்தானத்தையுமடைவாய்.

(தொடரும்) சீடன்.

# கைத்தொழிற்பகுதி.

## இராட்டினமும் அதன் பெருமையும்.

(40-ம் பக்கத் தொடர்ச்சி.)

### அன்னிய வியாபாரத்தால் இந்தியாவுக்கு வந்த கஷ்டம்.

ஆங்கிலேயர்கள் கிரேக்கர்களைப் போலவும், பாரசீகர்களைப் போலவும் இந்தியாவின்மீது படையெடுத்து இந் நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்துடனாவது, அல்லது தங்களுக்கு ஓர் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனாவது இங்கு வரவில்லை. ஆனால் தங்களது வியாபாரத்தை வளரச்செய்து இந்தியத்தொழில்களை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் வந்தார்கள். இந்தியக் கைத்தொழில்களில் முக்கியமாக ஒரு தொழிலை அழிக்கவேண்டுமென்றே அவர்கள் பெருமுயற்சி செய்தனர். அக்காலத்தில் இந்தியாவில் இராட்டினத்தில் அருமையாக நூல் நூற்று இந்தியர்கள் டெக்காமஸ்லின் போன்ற பல அரிய உயரிய உடைகளை யெல்லாம் நெய்து வந்தார்கள். இந்தியாவின் நெசவுத்தொழிலையும்,இராட்டினத்தில் நூல் நூற்கும் தொழிலையும் அழித்துவிட வேண்டுமென்பதே அவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. கைராட்டினத்தில் அக்காலத்தில் நம் நாட்டிலிருந்தவர்கள் 500-ம் நெ. வரையில் நூல் நூற்று வந்தார்கள். நம் நாட்டில் அக்காலத்தில் விவசாயத்திற்கு அடுத்தாற்போல் இராட்டினத்தில் நூல் நூற்கும் தொழில் இருந்து வந்தது. வீட்டுக்காரியங்களுக்கு யாதொரு பாதகமுமின்றி அக்காலத்தில் நம் நாட்டவர் துணிகளை உற்பத்தி செய்து வந்தது மிகவும் ஆச்சர்யத்தை யுண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறது. தங்களது உபயோகத்திற்கு வேண்டிய துணிகளையும், ஆடைகளையும் அவர்கள் வைத்துக்கொண்டு மிஞ்சியதை அன்னிய நாடுகளுக்குத் தங்களது கப்பல்களிலும், மரக்கலங்களிலும் கொண்டுபோய் விற்று வந்தனர். இந்தியாவில் செய்யப்பட்டுவந்த நெசவுத்தொழிலைப் பற்றியும், இராட்டினத்தில் நூல் நூற்கும் தொழிலைப்பற்றியும் டாக்டர் புச்சானர் என்ற பெரியார் நேரில் சென்று பார்த்து அவைகளைப்பற்றிப் புகழ்ந்து எழுதி யிருக்கின்றார். அவர் கூறியுள்ள விஷயங்களை மற்றோர் வியாசத்தில் குறிப்பிடுவோம். நம் நாட்டில் செய்யப்பட்டு வந்த நெசவுத் தொழிலுக்கு அதிகமான பொருளும் முதலும் அக்காலத்தில் நம் நாட்டிலிருந்தவர்களுக்கு அவசிய மில்லாமலிருந்தது. எனவே அப்படிப்பட்ட கஷ்டங்களினால் நமது நாட்டு நூல் நூற்கும் தொழிலும், நெசவுத்தொழிலும் அழிந்து விடவில்லை. மற்றோர் தொழிலுடன் போட்டி போட்டுக் கொண்டும் நம் நாட்டவர் அவைகளை அழியும்படி செய்தாரில்லை. "அன்னிய வியாபாரிகளின் சூழ்ச்சிகளினாலும், அநியாயமான முறைகளினாலுமே அவைகள் அழிக்கப்பட்டன" பிறகு மேல் நாடுகளுக்கு



நம் நாட்டவர்கள் கொண்டு போய் விற்று வந்த சரக்குகளின் மீதும் சாமான்களின் மீதும் அதிகமான வரி விதிக்கப்பட்டது. இங்கிலாந்து தேசத்தில் இறக்குமதி செய்யப்பட்ட இந்தியச் சாமான்களின் மீது தாங்கொணாத வரி விதிக்கப்பட்டது. அதன் பயனாக இந்தியாவின் அன்னிய நாட்டு வியாபாரம் நாளுக்கு நாள் அழிவுபட்டது. இந்தியச் சாமான்களின் மீது அதிகமான வரி விதித்ததனால் ஆங்கிலேயர்களின் தொழில்கள் அக்காலத்தில் காப்பாற்றப்பட்டன. ஆங்கிலேயர்கள் இந்தக் காப்பைச் செய்து கொண்டிராவிடில் அக்காலத்திலேயே அவர்களது நாட்டிலுள்ள மான்செஸ்டர், லங்காஷையர், கிளாஸ்கோ முதலிய நகரங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற துணி ஆலைகள் மூடப்பட்டிருக்கும்.

### இராட்டினத்தில் நூற்றல் நமக்கு அவசியமா ?

இந்தியாவில் இருக்கின்ற ஓர் இந்தியனுக்கு சராசரி வருஷ வருமானமென்ன? தாதாபாய் நௌரோஜி,டிக்பி,ராமேசதத்தர் முதலிய பெரியார்கள் இந்த விஷயத்தைப் பற்றி நன்கு வாதித்திருக்கின்றார்கள். "பிரிட்டிஷ் அரசாட்சியின் கீழ் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இந்தியருக்குச் சராசரி வருஷ வருமானம் ரூபாய் 30 தான்" என்று இந்தியாவின் இராஜப் பிரதிநிதியாக இருந்த லார்டு கர்சன் துரைமகனார் கூறி யிருக்கின்றார். அதிலிருந்து ஒவ்வொரு இந்தியரின் தினசரி வருமானம்0—1—3. இராட்டினத்தில் நூற்பதனால் நாம் என்ன சம்பாதிக்க முடியுமென்று பலர் பலவிதமாகப் பேசலாம். வருஷா வருஷம் நமது நாட்டிலிருந்து ஆடைகளுக்காகவும், துணிகளுக்காகவும் 6 கோடி பவுன்கள் வரையில் அன்னிய நாடுகளுக்கு செல்லுகின்றன. ஒருவன் இராட்டினத்தில் தினம் 8 மணி நேரம் நூற்றுவந்தால் அவனுக்குக் குறைந்தது 2 அணா சம்பாதிக்க முடியும். இதிலிருந்து ஓர் இந்தியனின் வருமானம் இரண்டு பங்கு அதிகமாகுமல்லவா? இந்தப் பெருந்தொகை நம் நாட்டிலேயே இருந்தால் அதனால் நம் நாட்டிலுள்ள பலர் வயிறார உண்டு தங்களது வாழ்க்கையை நடத்தலாம். இதையறிந்தே நமது நாட்டின் அருந்தலைவரான காந்தி அடிகள், இராட்டினத்தில் நூல் நூற்பதையும், கதரை அணிந்து கொள்வதையும் வற்புறுத்தி வருகின்றார்.

நமது நாட்டில் இருக்கின்றவர்களில் பலகோடி பேர்கள் உண்ணுவதற்குப் போதிய உணவின்றி,உடுக்க உடையின்றி மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். எனவே நாம் நம் நாட்டுத் தொழில்களை வளர்த்து அவைகளை ஆதரிக்க முற்படுவோமானால் நம் நாட்டுக் கைத்தொழில்கள் எல்லாம் மறுபடியும் வளம் பெறும். பசியினால் பீடிக்கப்பட்டு வருந்தும் நம் நாட்டு ஏழை நெசவுக்காரர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வயிறார உணவு கிடைக்கும். நாம் ஒவ்வொருநாளும் ஒழிந்தநேரங்களில் இராட்டினத்தில் நூல்நூற்று வந்தால், அந்த நூலைக்கொண்டே நமக்குவேண்டிய ஆடைகளை அதிகச்செலவின்றி நெசவுசெய்துகொள்ளலாம். ஒருகாலத்தில் சென்னைக்குக் கவர்னராக இருந்த லார்டு ஆம்தில் என்பவர் தமது ஊரிலுள்ள வியாபாரிகளுக்கு

"காந்தி அடிகள் ஆரம்பித்திருக்கின்ற கைராட்டின இயக்கம் நம்மை ஏழைகளாக்கிவிடும்; அந்த இயக்கம் இந்தியாவெங்கும்பரவி வலுப்பட்டால் இங்கிலாந்து அதோகதியாகும்" என்று எச்சரிக்கை செய்திருப்பதை உற்றுநோக்கினால் இராட்டினத்திற்கு இருக்கும் பெருமை விளங்கவில்லையா? ஆகையினாலேதான் மகாத்மாகாந்தி இராட்டினத்தொழில் அவசியமென்பதை வற்புறுத்துகின்றார். நம் வீட்டுப்பெண்மணிகள் ஒழிந்தநேரங்களில் இராட்டினத்தில் ஏன் நூல் நூற்கக்கூடாது? நம்நாட்டுப் பெண்மணிகள் நூல் நூற்க ஆரம்பித்துவிட்டால் நமக்குத் தேவையான நூல் அதிலிருந்தே கிடைத்துவிடும். நாம் நூற்காவிடினும் நம்நாட்டில் செய்யப்பட்ட துணிகளையேவாங்கி உடுத்தவேண்டும். அப்படிச்செய்தால் அன்னியநாடுகளுக்குத் துணிக்காகச் செல்லுகின்ற பணம் நமது நாட்டிலே நின்றுவிடும். எனவே தமிழ்மக்கள் காந்தி அடிகளின் ஆணையைப் பின்பற்றித் தமிழ்நாட்டில் இராட்டினத் தொழிலை அபிவிருத்தி யடையும்படி செய்தல் வேண்டும். நமக்கு நூற்பதற்கு வேண்டிய பருத்தியை நாம் நமது கிராமங்களிலேயே சுலபமாகச் சாகுபடி செய்துகொள்ளலாம். நாம் மீண்டும் இவ்விஷயத்தைப்பற்றி எழுதுவோம். தேசத்தில் நூல் நூற்கும் தொழில் வளர்க்கப்பட்டால் நமதுநாட்டின் பொருளாதார நிலைமை வலுப்படும் என்பதில் ஐயமில்லை. நமது கைத்தொழிலும் வளம் பெறும். நமது நாட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களும் கஷ்டங்களும் ஒழிந்துவிடும். எனவே தமிழர்கள், இனியாவது இராட்டினத் தொழிலை வளர்க்க முற்படுவார்களாக.

நூற் கலைஞன்.

# விரதப் பகுதி.

## கிருஷ்ணஜயந்தி—விநாயக சதுர்த்தி.

தேகாரோக்கியத்திற்கும் சுக வாழ்விற்கும் இன்றியமையாதது விரதம். இடை யிடையே உண்ணாதிருத்தலை அல்லது ஒரு மாதத்தில் குறைந்தது இரண்டு நாளாவது உண்ணாதிருத்தலைக் கடைப்பிடித் தொழுகுவது நமது கடமையாயிருத்தல் வேண்டும். விதிவிலக்குகளுண்டாக்கிய அறிவாளரும் இதனை வற்புறுத்துகின்றனர். ஏனெனில்,

நமது வயிற்றின் சம்பந்தமாக 32-அடி நீளமுள்ள குழலொன்றிருக்கிறது. இந்தக் குழலில், நாம் உட்கொள்ளும் வஸ்துக்களில் தேக சம்ரக்ஷணைக் கவசியமில்லாத அசத்துப் பாகங்கள் நெடுநாள் தங்கியிருக்கும். அவ்வாறு தங்குவதால் அவை விஷமாக மாறிவிடுகின்றன. இம்மாறுதல் சரீரத்தின் சுகநிலையைக் கெடுத்துப் பற்பல நோய்கள் தலை யெடுப்பதற்கு ஆதாரமாகின்றது. இத்துர்க்கதி நேரிடாதிருப்பதற்கே விரதங்களை யனுஷ்டித்து வருமாறு பெரியோர்கள் திட்டஞ் செய்திருக்கின்றனர். அன்றியும் விரதப் பழக்கம்



மனவொடுக்கத்திற்கும் சாதகமாகின்றது. மனவொடுக்கம் தெய்வ பக்தியை உறுதிப்படுத்தி நற்கதி பெறுதற்கும், இஷ்ட சித்தியடைதற்கும் துணைக்கருவியாய் விடுகின்றது. இத்தகைய உட்கருத்தைக் கொண்டே நமது பெரியோர்கள் விரதானுஷ்டானத்தைக் கட்டாயமான தெய்வ வழிபாடாக ஏற்படுத்தியிருக்கின்றனர்.

விரதம், இருபகல் உணவுகொண்டிருத்தல், நல்லுணவு கொள்ளுதல், வில்வம், அரசு, அத்தி இவற்றின் தளிர்களை யுட்கொண்டிருத்தல், ஒரு பகல் பிண்ணாக்கு, பால், மோர், நீர், பொரிமா இவற்றில் ஏதாவதொன்றை யுண்டிருத்தல், மூன்று நாள் ஒருபிடி அன்னத்தை யுட்கொண்டிருத்தல், இருபத்தொருநாள் பாலே குடித்திருத்தல், மூன்று நாள் காலை, மூன்று நாள் இரவு, 3-நாள் இடைவேளை யுண்ணுதல், 3-நாள் அல்லது 12-நாள் உணவின்றியிருத்தல் முதலாகப் பலவகைப்படும்.

காலையிலெழுந்து நித்திய கடமைகளை முடித்துக்கொண்டு, முன்னாளும் உபவாசியராயிருந்து, தீய நாட்களை விலக்கிக் குற்றமற்ற சுபதின நாட்களில் விரதங்களைத் தொடங்கல் வேண்டும் என்பர். சுமங்கலிகள் புருஷன் கட்டளையின்படி விரதங்களை யனுஷ்டித்து வருதல் வேண்டும்.

மக்களின் சரீர சுகத்தையும் ஆன்ம சுகத்தையும் கருதிய பேரறிவாளர் சுப விரதங்கள் பலவற்றை ஏற்படுத்தி, அவற்றை அனுஷ்டானத்தில் கொண்டு வரும் வழக்கத்தை விதிரூபமாக உண்டாக்கிவிட்டனர். அத்தகைய விரதங்களுள் கிருஷ்ண ஜயந்தி அல்லது கோகுலாஷ்டமியும், விநாயக சதுர்த்தியும் அடங்கியவை.

கிருஷ்ண ஜயந்தி இவ்வருடம் ஆவணி மாதம் 14-ம் தேதி (30-8-26) திங்கட்கிழமை வருகிறது. அத்தினம் கிருஷ்ண பட்சத்தைச் சேர்ந்ததாயும், உரோகணி நட்சத்திரமும், அஷ்டமி திதியுங் கூடியதாயும் இருக்கின்றது. இந்தச் சுபதினத்தில்தான் கிருஷ்ண பரமாத்துமர், "உலகத்தில் தருமங் குறைந்து அதருமம் மிகும்போது, பின்னுற்றதைப் போக்கி முன்னுள்ளதை நிலைநிறுத்த நான் யுகங்கள் தோறும் அவதரிக்கிறேன்" என்று கீதையில் சொல்லியிருக்கிறபடி அவதரித்தருளினர்.

தேவர்களும் மகரிஷிகளும் அசுராமிசர்களாகிய கம்சன் சிசுபாலன் முதலிய அதிக்கிரமித்தர்களால் தங்கள் கன்மானுஷ்டங்களுக்குப் பல வழியிலும் நேரிடும் இடையூறுகளை யொழித்துத் தங்களை ரக்ஷித்தருள வேண்டுமென்று செய்துகொண்ட வேண்டுகோளை நிறைவேற்றவும், தேவகி, பரமாத்துமாவை யொத்த ஒரு குழந்தையைத் தான் தன் வயிற்றிற்கொண்டு பெறவேண்டுமென்றெண்ணிய மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யவும், யசோதை, பரமாத்துமாவை நிகர்த்த ஒரு மகவின் திருவிளையாடல்களைக் கண்டு களிக்க வேண்டுமென்றுன்னிய உள்ளக்கருத்தை முடித்தருளவும், சில ரிஷிபுங்கவரின் கோரிக்கையை யொட்டி "நான் கிருஷ்ணாவதார மெடுக்கும்போது நீங்கள் கோபிகாஸ்திரீகளாக ஆயர்பாடியில் அவதரிக்கக் கடவீர்கள்; அப்போது

உங்கள் மனோரதங் கைகூடு''மென்று கொடுத்தருளிய வரத்தைப் பரிபாலனம் புரியவுமே, பரமாத்துமா இந்த அவதாரத்தை யுவந்தருளினன். உடைமையைக் காப்பது உடையவனுக்குரிய கடமையன்றூ ?

மேற்சொன்ன சுபதினத்தில் உலகோத்தாரணமாகப் பகவான் வடமதுரையின் கண் வசுதேவரென்னும் உத்தமபுருடரின் இல்லக்கிழத்தியும், கம்ஸனென்னும் கொடுங்கோலாசனுக்குத் தங்கையுமாகிய தேவகியின் திருவுதரத்தில் மகவாய்ப் பிறங்கலானர்.

தேவகிக்கு விவாகமானபோது கம்ஸன் அவளை ஆடம்பரக் கோலத்துடன் ஓரிரதத்திலேற்றி நகர்வலம் வந்தான். வரும்போது அவ்வரசனை நோக்கி "அடே கம்ஸா! நீ எவளை இத்துணை அலங்காரத்துடன் தேரேற்றிச் செல்கின்றாயோ அவள் வயிற்றிற் பிறக்கும் எட்டாவது குழந்தை உன்னைக் கொல்லும்'' என்று அசரீரி வாக்கொன் றுண்டாயது. இதைக்கேட்டதும் கம்ஸனுக்குக் கோபமுந் திகிலும் உண்டாயிற்று. உடனே அவன் தனது தங்கையைக் கொல்லத் துணிந்தான். ஆனல் வசுதேவரின் வேண்டுகோளின் படி தேவகி வயிற்றிலுதிக்கும் குழந்தைகளைக் கொல்லுவதென்கிற தீர்மானத்தைக்கொண்டு வசுதேவரையும் தேவகியையும் காராக்கிரகத்திலடைத்து வைத்தான்.

இக்கிரகத்தில்தான் பரமாத்துமா ஸ்ரீகிருஷ்ணமூர்த்தமாகப் பிறந்து தேவகியின் விருப்பத்தைத் தலைக்கட்டினர்.

கம்ஸனுக்கு அஞ்சியிருந்த வசுதேவர், இத்தெய்வக் குழந்தையை அவனறியாதபடி ஆயர்பாடிக்குக் கொண்டுபோய் ஆங்குத் தமது நண்பராகிய நந்தகோபரென்னும் ஆயர் வேந்தனுடைய மனைக்கிழத்தி யசோதையிடம் சேர்த்து விட்டு அம்மாதரசி பெற்ற மாயையாகிற பெண்குழந்தையை யெடுத்துக்கொண்டுவந்து கம்ஸனிடம் ஒப்புவித்தார். நிற்க,

பரமாத்துமா உலகரக்ஷணார்த்தம் அவதரித்த இந்தக் கிருஷ்ண ஜெனனத்தை ஆயர் பாடியில் வியக்கத்தக்கதோர் மகோற்சவமாகக்கொண்டு அங்குள்ளாரனைவரும் திரிகரண சுத்தியோடும் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவராய் ஓடுவதும், ஆடுவதும், பாடுவதும், ஒருவர்மீ தொருவர் விழுவதும், கலவைப்பொடி முதலியவற்றைத் தூவிக்கொள்வதுமாய் நின்று, மாதுரியமான பலவித பட்சண சித்திரான்னங்களைச் செய்து பகவத்பிரீதிக்கென்று அவற்றை யுட்கொண்டனர்.

இக்கொண்டாட்டம் அவ்வாறே அச்சுபதினம் வரும்போது ஸ்ரீகிருஷ்ணபிமானமுள்ள உலகத்தவரால் கொண்டாடப்பட்டு, கிருஷ்ண விக்கிரகம் போன்ற புத்திரப்பேறு முதலிய இஷ்டசித்திகள் அடையப்பெற்று வருகின்றன.

நாமும் இந்தச் சந்தர்ப்பத்தைக் கொண்டாடிக் குறைதீர்ந்துய்வோமாக.



"ஒருத்திமகனய்ப் பிறந்தோ ரிரவில்
ஒருத்திமகனு யொளித்து வளரத்
தரிக்கில னகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில்
நெருப் பென்னநின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"—

ம. இராஜகோபால பிள்ளை,
சோமேசுவரன்பேட்டை, சென்னை.

---

## விநாயக சதுர்த்தி.

விநாயகப் பெருமானே நமக்கு முதற்கடவுள் என்று ஆன்றோரால் கூறப்படுகிறது. அவருடைய அவதாரத்தைக் குறித்து நம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வது முக்கிய கடமையாகும்.

ஒரு நாள் பிரமதேவன் கொட்டாவி விட, அதினின்றும் சிந்துரன் என்றொரு அசுரன் தோன்றினன். எவரைத் தழுவினலும் அவர் இறத்தலான வலியை அவன் பிரமனல் பெற்றான். பெற்ற பிறகு தந்தையாகிய பிரமனையே தழுவப்போனன். பிரமன் சிவனிடம் அடைக்கலம் புகுந்தான். அப்பால் சிந்துரன் தேவர்களை வருத்தித் திரிந்துகொண் டிருந்தான். இவ்வாறு இருக்கும்போது "உன்னைக் கொல்லப் பார்வதியார் வயிற்றில் ஒரு சிசு வளர்ந்து கொண்டிருக்கிறது'' என்று அசரீரி கூறக் கேட்டு, பார்வதியார் வயிற்றில் வளர்ந்திருந்த விநாயக மூர்த்தியின் சிரத்தைக் காற்றுருவாய்ச் சென்று சேதித்து, அச்சிரத்தை நருமதையாற்றி லிட்டான். பின்பு விநாயகர் யானை முகத்தோடு அவதரித்தார். தன்னோடு யுத்தத்துக்கு வந்த சிந்துரனை அவர் கசக்கித் திலகமாகக் கொண்டார்.

இங்ஙனம் சிந்துரனை ஸம்ஹரிக்க விநாயகர் யானைமுகக் கடவுளாய் அவதரித்த தினம் ஆவணிமாதம் பூர்வபக்ஷம் சதுர்த்தி திதி. அது 11-9-26-ல் இப்போது வருகிறது. பலபெரியோர்கள் அவரைத் தொழுது அவ்வவரெண்ணப்படி தகுந்தபேறு பெற்றதினமும் அத்திதியே ஆகையால் அத்தினம் விநாயக விரதத்துக்கு யோக்கியமானது.

இந்தத் தினத்தில் காலையில் எழுந்து ஸ்நாநஞ்செய்து நித்தியானுஷ்டான முடித்துக்கொண்டு, அபிஷேகம், அலங்காரம், அருச்சனை, நிவேதனம், தூபம், தீபம், இவைகளுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து வைக்க வேண்டும். பிறகு சுத்தமான இடத்திலிருந்து பொன் முதலிய லோகங்களினலோ அல்லது மண்ணினலோ விநாயக மூர்த்தியின் திரு உருவமைத்துக் கலசந் தாபித்து, ஆவாகித்துச் சந்திரனுக்கு அர்க்கியங்கொடுத்து அக் கணே

சரை நோக்கிக் கஷ்ட நிவாரணம் செய்யுமாறு பூஜித்து இஷ்டகாமியத்தை யடைய வேண்டியது.

நமது தமிழ் மக்கள் அனைவருக்கும் இது ஓர் சிறந்த விரதமாகும். பலவித பலகாராதிகளை மக்கள் இத்தினத்தில் உண்டு களிப்பதுடன் சுகவாழ்வையும் பெறுவார்கள். நாமுமிதனைக் கவனித்து அவ்வாறே செய்துய்வோமாக.

"வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுத்து வரும்."

வ. ச. சூரியநாராயண மூர்த்தி, வாலாஜா.

## வர்த்தகப் பகுதி.

### வியாபார விதிகள்.

[வியாபார விதிகளைப் பற்றி நம் "ஆனந்தபோதினி"யில் முன்னமேயே பல விவரங்கள் வெளியாயிருக்கின்றன. அவற்றோடு இன்னுஞ் சில விதிகளை "வியாபாரகேசரி" என்ற பத்திரிகையினின்று இங்கு எடுத்து எழுதுவது நலமென உன்னி அதையும் எழுதலாயிற்று.]

(1) எந்த வியாபாரஞ் செய்தாலும் அதை நல்ல நிலைமையில் நடத்த எவ்வளவு மூலதனம் வேண்டியிருக்குமோ அவ்வளவு பணத்தை மூலதனமாகக் கையில் வைத்துக்கொண்டுதான் பின் வியாபாரத்திற்கு ஆரம்பம் செய்ய வேண்டும். மூல தனந்தான் வியாபாரத்திற்கு உயிர்.

(2) நமது சௌகரியப்படி வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் பொது ஜனங்கள் வாங்கவரும் பொது இடத்தில் வியாபார ஸ்தலத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(3) தொழில் ஸ்தாபிப்பதற்கு இடம் தெரிந்தெடுப்பதில் வாடகை குறைவாயிருப்பதுதான் லாபகரமானதென்று எண்ணக்கூடாது. அவ்விடத்திற்கு வாடிக்கைக்காரர்கள் சுலபமாய் வரக்கூடுமா என்பதைக் கவனிக்கவேண்டும். வாடிக்கைக்காரர்கள் வரக்கூடாத இடத்தில் தொழில் நடத்துவதும் வாடிக்கைக்காரர்களுடைய வீடு வீடாய்ப்போய் வியாபாரம் நடத்தலாம் என்று எண்ணுவதும் பிசகு. அதிகமான வாடிக்கைக்காரர்கள் சௌகரியமாகக் கடைக்குவரக்கூடிய இடத்தில் அதிக வாடகை கொடுத்தாவது இடம் எடுத்துக்கொள்வதுதான் மிகவும் சிறந்தது. அடிக்கடி வாடிக்கைக்காரர்களைத் தேடிப் போவதில் காலம் வீணாய்ப் போக்குவதைவிட சௌகரியமான இடத்தில் அதிக வாடகை கொடுப்பது நல்லது. ஆனால் தொழிலின் அளவுக்குத் தகுந்தபடி வாடகை மிதமா யிருக்கவேண்டும்.

(4) பிறவியாபாரிகளை யோக்கியமானவர்களென்றே எண்ணியிருக்க வேண்டும். வாடிக்கைக்காரர்கள் மற்ற வியாபாரிகளைப் பற்றிச் சொல்லும் குற்றம் குறைகளை யெல்லாம் நம்பி விடக்கூடாது.

(5) வாங்கவருபவர்களிடம் மரியாதையாய் நடந்து கொள்ளவேண்டும். ஒரு சாமானுக்கு இன்னொரு சாமான் கொடுத்தும், இல்லாததை இருக்கிறதென்று சொல்லியும் அவர்களை ஏமாற்றக்கூடாது. அவர்களிடம் நமக்குத் தெரிந்த வியாபார இரகசியங்களைச் சொல்லக்கூடாது.



(6) நமக்குத் தெரியாதவர்களுக்கு ரொக்கத்திற்கே சாமான்களை விற்க வேண்டும். எல்லோருக்கும் கூடியமட்டும் குறைவாகவே கடனுக்குக் கொடுக்க வேண்டும். அதிக காலத்திற்குக் கடனை வசூலிக்காமலிருந்தால் பத்துக்கு ஒருவர்கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் போவார். பாக்கி ஒன்பது பேரில்வரும் லாபத்தைவிட அதிகமாகவே அந்த பத்தாவது பேர் வழியால் நஷ்டமேற்படும்.

(7) சாமர்த்திய முள்ளவர்களை நல்ல சம்பளம் கொடுத்து வேலைக்கு வைத்துக் கொள்வதால் அவர்கள் வியாபாரத்தின் விருத்தியை நாடி ஊக்கத்துடன் உழைப்பார்கள்.

(8) வியாபாரத்திற்கு வேண்டிய சாமான்களைக் கூடுமானவரையில் ரொக்கத்திற்கே வாங்கவேண்டும். அப்படி வாங்குவதற்காக கமிஷன் கொடுக்கும்படி கேட்கவேண்டும்.

(9) என்னலாபம் கிடைக்கிறதென்பதைப் பிறரிடம் சொல்லக்கூடாது. சொன்னால் வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்படும்.

(10) வியாபாரம் நிலைத்து விட்டால் தன்னலத்தையே பாராட்டாமல் மற்ற வியாபாரிகளின் நலத்தையும் கோரவேண்டும்.

அ. ச. அருணசல ரெட்டியார்.

## வைத்தியப் பகுதி.

### தொத்து வியாதிகள்.

உலகில் தொத்து வியாதிகள் பல இருந்து வருகின்றன. அவற்றுள் ஆடி ஆவணி மாதங்களில் வாந்திபேதி என்னும் வியாதி ஜீவர்களை நடுங்கச் செய்யத்தக்கதாய் ஆரம்பிக்கின்றது. ஆகையால் அத்தகைய பயங்கரமான வியாதியை ஜீவர்களின்பா லணுக வொட்டாமல் காத்துக்கொள்ள வேண்டிய சில விதிகளை இங்கு எழுதலானேம். அதாவது ஆடி மாதங்களில் சீதோஷ்ணங்கள் மாறுத லடைகின்றன; சிறு மழைத்துளிகள் வெப்பத்தை அதிகப்படுத்துகின்றன. இவற்றைப் பரிசிப்பதாலும், ஜீவநதிகளில் ஏற்கெனவே அடைந்து கிடக்கும் மக்கி அழுகின இலைகள் சம்பந்தமும் மண்சம்பந்தமும் பெறற புது வெள்ளத்தின் சலத்தை உட்கொள்வதாலும், அசுத்தமான ஆகாரங்களை யுண்பதாலும், வீடுவாசல்களை சூரிய உஷ்ணத்தால் உலரவிடாமல் கெட்ட நாற்றத்துடன் வைத்திருந்து வாசம் செய்வதாலும், மேற்படி மாதம் காலை 3-மணிக்கு உண்டாகும் மாறுதலுடைய விஷக்காற்றினலும் ஏற்படும் வியாதியை, மேற்படி மாதத்தில் உற்பத்தியாகி, அபரிமிதமாய்ப் பெருகி, ஜீவர்களுக்குப் பலவித தொந்தரவைக் கொடுக்கும் ஈக்கள், காலரா வியாதியை க்ஷணத்தில் பரவச் செய்துவிடுகின்றன. எப்படியெனில் சாதாரணமாய் ஒருவருக்கு விஷபேதி உண்டானபிறகு அவரால் கழிக்கப்பட்ட விஷமலத்தின்பேரிலும் விஷ வாந்தியின்பேரிலும் ஈக்கள் உட்கார்ந்து அவ்விஷத்துடனே ஜீவர்களின் சரீரத்தின்பேரிலும் தின்பண்டங்களின்பேரிலும் உட்காருவதால் அது விஷத்தை இன்ஜெக்ஷன் செய்வது (உட்செலுத்துவது) போலாகின்றது. சில சரீரங்களில் மேற்படி விஷம்பட்ட மாத்திரத்தில் பற்

றிக்கொண்டு சரீரத்தை நாசமடையச் செய்கின்றது. விஷபேதியின் பேரில் உட்காரும்படியான ஈக்களின் கால்களில் மேற்படி பேதியிலுள்ள கிருமிகள் பற்றிக்கொண்டு அவ்வீக்கள் உட்காரும் இடங்களில் பரவுகின்றன. இத்தகைய விஷக்கிருமிகளைப் பரவவிடாமல் நாசமடையச் செய்ய முன்னோர்கள் என்ன கண்டுபிடித்தார்கள் என்று பார்க்குமிடத்து மேற்படி கிருமிகளை நாசம் செய்யக்கூடிய ஔடதம் மஞ்சள் என்று கண்டுபிடித்து மேற்படி காலங்களில் வாசற்படிகளில் மஞ்சள் நிறையப் பூசியும் துணிகளை மஞ்சள் சலத்தில் நனைத்து வீதிகளிலும் வாசற்படிகளிலும் தொங்கவிட்டும் மேற்படி விஷபேதியால் வருந்துபவரிடம் சென்று, 'கடவுளின் நம்பிக்கை உண்டாகி பக்தியையடைந்து உஜ்ஜீவிக்கக்கருதி இந்த மஞ்சள் சலத்தை அம்மன்பேரால் சாப்பிடு' என்று நிறைய மஞ்சள் சலத்தைக் குடிப்பிக்கின்றார்கள். மஞ்சள் சலம் சரீரத்தினுள் சென்றதும் விஷக்கிருமிகள் உடனே நாசமடைந்து வியாதியஸ்தன் குணமடைகிறான். அதுசமயம் அங்குள்ள அவன் சுற்றத்தார்கள் மாரியம்மனுக்கு இரட்டைக் கடாவும் ஒரு டெசன் கோழியும் பலியிடுவதாகப் பிரார்த்தித்து ஜீவ இம்சை செய்ய முன்வந்துவிடுகின்றார்கள். மேற்படியார்களின் அறிவில் மாரியம்மனால் பிழைக்கவில்லை மஞ்சள் சலத்தால் பிழைத்தான் என்னும் யோசனை எட்டாததால் நிர்ச்சம்பந்தமான ஜீவன்களைப் பலி கொடுக்கின்றார்கள். ஆனால் இத்தகைய விஷயங்கள் இப்போது கிராமாந்திரங்களில் நவீன கல்வியில்லாதவிடத்தில்தான் நடைபெறுகின்றன. மற்ற இடங்களில் பெனைல் முதலான டிஸ்இன்பெக்ஷன் என்னும் ஔஷதங்களைக் கொண்டும் சலைன் இன்ஜெக்ஷன் என்னும் உப்புத்தண்ணீரை சரீரத்தில் ஏத்துவதுமான சிகிச்சைசெய்து வருகின்றார்கள். இவற்றைவிட ஆயிரம் மடங்கு மேலானதாயும் வியாதியைக் குணப்படுத்துவதுடன் பரவவிடாமல் கிருமிகளை நாசம் செய்யத்தக்கதாயுமுள்ள நம்முடைய பூர்வீக சிகிச்சையாகிய மஞ்சள் சலம் குடித்தல், மஞ்சள் ஜலம் வீடுபூராவும் தெளித்தல், மஞ்சளால் நனைத்த துண்டுகளைக் கையில் வைத்துக்கொண்டு முகருதல் என்பவைகளைச் செய்துவரும் பட்சத்தில் ஒருவர்கூட மேற்சொன்ன வியாதியால் மரணமடையமாட்டார்கள். ஆனால் பாமரர்கள் இனியாவது மஞ்சள் சிகிச்சையால் வியாதி குணப்படுமென்பதைத் தெரிந்துகொண்டு, ஆடுமாடுகளைக் கொலைசெய்யாம லிருக்குமாறு பிரார்த்திப்பதும் தவிர இதைக் கண்ணுறும் சகலரும் அவரவர்களால் கூடியவரையில் மஞ்சள் சலத்தால் காலரா நாசமடையுமென்று சகலர்க்கும் அறிவித்து, சகலரையும் தாராளமாய்க் கையாளும்படி செய்விக்குமாறு போதிக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

---

## பாம்பு கடிக்கு மருந்துகள்.

**பா**ம்பின் விஷத்தால் மனிதர்க்குப் பல அபாயங்கள் நேர்ந்து வருகின்றன ஆதலின் எல்லோரும் அந்த ஆபத்தினின்றும் நீங்கும் மார்க்கங்களை அறிந்துகொள்ளவேண்டும்; கீழ்க்கண்டவற்றைத் தெரிந்து வைத்துக்கொண்டால், விஷத் தீமையினின்றும் விலகிக்கொள்ளலாம்.

1. வலங்கைமானுக்குப் பக்கத்திலுள்ள பாடாச்சேரி என்ற ஊரில் இருக்கும் பரிகாரி வகுப்பைச்சேர்ந்த மூக்கன் என்னும் பண்டிதரிடத்தில் சஞ்சீவிபோன்ற ஒரு வேர் இருக்கின்றது; அதை வேப்பெண்ணெயில் இழைத்து, பாம்பு விஷமேறியவர்களின் காலில் தடவினால் மறுநிமிட்மே விஷம் பறந்துவிடும்.



2. கோட்டூருக் கருகில் உள்ள பனையூர் என்னும் ஊரின் காளிகோவில் பூசாரி பாம்புவிஷ மேறியவர்களுக்கு விபூதியை எடுத்து உச்சிமுதல் உள்ளங் கால்வரை தடவுவதால் விஷம் இறங்கிவிடும்; விஷத்தால் பிரக்ஞை தப்பியவர்களும் இவர் விபூதியால் தெளிவடைகிறார்கள்.

3: சிறியாநங்கைச் செடியைப் பறித்துவந்து அதனுடன் கொஞ்சம் மிளகைச் சேர்த்தரைத்து, விடமேறியவர்களுக்கு உள்ளே கொடுத்துவிட்டால் அவர்கள் மூர்ச்சை யடைந்திருந்தாலும் சிறிதுநேரத்தில் தெளிவடைந்துவிடுவார்கள்.

4. சாதாரணமாய் ஆற்றோரங்களில் அகப்படும் வெப்பாலை குத்துப் பாலைச்செடியின் இலையையும் மிளகையும் சேர்த்துக் கொஞ்சம் தண்ணீர் விட்டரைத்து, பாம்பால் கடிக்கப்பட்டவர்களுக்கு உள்ளே கொடுத்தால் விஷம் நீங்கிவிடும்.

5. குப்பைமேனித்தழை, அப்பிக்கோவைத்தழை, மிளகு இம்மூன்றையும் அரைத்து, விடமேறியவர்க்குக் கொடுக்க விடந் தீரும்.

6. விழும்பிப்பழத்தையும், பச்சைவெண்ணெயையும் சேர்த்தரைத்து விஷமயக்க முடையவர்க்குக் கொடுக்க அது நீங்கும்.

7. மயில் துத்தத்தைப் பொடிசெய்து, விடமேறியவர்கள் நாசியில் வைத்து உறிஞ்சச்செய்வதோடு, குளிர்ந்த ஜலத்தை, அவர்கள், 'குளிர்கிறது' என்று சொல்கிறவரையில் அவர்களின் தலையில் விட்டுக்கொண்டிருந்தால் விடம் அகன்றுவிடும்.

8. பச்சைப் புகையிலைச் சாற்றில் அரைக்கால் படியோ வீசம் படியோ விஷந் தீண்டியவர்க்கு உள்ளே கொடுத்து அவரைப் பருகச் செய்தால் உடனே விஷந்தீரும். பச்சைப் புகையிலை அகப்படாதபோது காய்ந்த புகையிலையில் தண்ணீர்விட்டுப் பிசைந்து மேற்கண்ட அளவு சாறெடுத்து அதனுடன் கொஞ்சம் வேப்பெண்ணெய் கலந்து கொடுக்கலாம்.

9. பெருங்காயம், உள்ளிப்பூண்டு, அரிதாரம், மிளகு, இந்துப்பு இவற்றைச் சமபாகஞ் சேர்த்தரைத்துக் குளிகையாக்கி, அதனை, பிள்ளைப்பாலில் இழைத்து விஷமுள்ளவர் கண்ணில் கலிக்கம்போட்டால் விஷம் நிவர்த்தியாகிவிடும்.

"போதுஜன நண்பன்."

## பெண்மக்கள் பகுதி.

### வரலக்ஷ்மி விரதம்.

இந்த உத்கிருஷ்டமான விரதம் நாளது ஆவணி மாதம் 4-ம் தேதி வெள்ளிக்கிழமை (20-8-26) வருகிறது. இதன் மகத்துவத்தைப் பற்றிச் சூதமா முனிவர் சௌனகாதி மகரிஷிகளுக்குச் சொல்லியிருக்கின்றார். ஆதியில் இதனை சாக்ஷாத் சிவபெருமான் உமாதேவியாருக்கு எடுத்துரைத்தார். பரிசுத்த உள்ளத்தோடு இதனை அனுஷ்டிப்பவர் இகபரலோக போகங்களை எளிதிலடைவர்.

மகத தேசத்தில், குண்டினபுரத்தில் சாருமதி என்னும் கற்பரசி ஒருத்தியிருந்தாள். அவளுடைய கனவில் லக்ஷ்மி தேவியானவள் தோன்றி "உத்தமி! உனது நற்குண நற் செயலுக்கு நான் மிகுதியும் சந்தோஷிக்கிறேன். நீ என்னைக்குறித்து ஆவணி மாத பூர்வ பட்சத்தில் வரும் இவ்விர

த்தை யனுஷ்டித்து வரக்கடவாய். அதனால் நீ எல்லா நலங்களையும் எளிதில் பெற்று: சுகமுடன் வாழ்வாய் என்று சொல்லி மறைந்தருளினள்.

அவ்வாறே சாருமதி என்பவள் அனுஷ்டித்துச் சுகப்பேறுகளனைத்தையும் ஒருங்கே யடைந்தாள்.

ஆகவே பெண்மணிகளாகிய நாமும் இலட்சுமிதேவியை வழிப்படும் இவ் விரதத்தைக் கொண்டாடி நன்மையுறுவோமாக. ப-ர்.

## நாவல் பகுதி.

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(47-ம் பக்கத் தொடர்ச்சி.)

**ஆன:**—படுமோசக்காரப்பயல்; அவன் ஒரு போதும் அதை மனோகரனுக்கு எழுதிக் கொடுக்கமாட்டான். முழு ஆஸ்தியையும் தான் அபகரித்துக் கொள்ளக்கருதியது என்னால் கெட்டுப்போய் விட்டபடியால் பாதியை யாவது அபகரிக்க வெண்ணி யித்தந்திரம் செய்திருக்கிறான். அப்பத்திரம் இராத்திரிக்கு எழுத ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அவன் இராத்திரிக்கு இங்கு வருவானல்லவா?

அம்பாலிகை ஆம் என்றாள். அதன்பின் இருவரும் கறுப்பண்ணனைப் பிடிக்க வேண்டியதைப்பற்றி சற்று நேரம் ஆலோசனை செய்து கொண்டிருந்து பிறகு வீட்டிற்குள் சென்றார்கள். இதற்கிடையில் இவர்கள் சம்பாஷணைக்கு விரோதமாக வேறொரு சூழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அம்பாலிகை ஒரு பெரிய விஷயத்தைத் தான் கண்டு பிடித்ததாக வெண்ணிக் கொண்டு சுறு சுறுப்பாய் வேலை செய்யத் தொடங்கினாள்.

ஆனந்தலிங்கும் அம்பாலிகையும் தோட்டதில் பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒரு ஸ்திரீ மறைவிலிருந்து ஒத்துக் கேட்டதைக் கண்டான் என்று கூறினோமல்லவா. அப்படி வந்து கேட்டது அமிர்தம்மாளென்று அவனுக்குத் தெரியும். அதனால் அவன் பீதியாவது கலவரமாவது அடைந்தவனல்ல, அச்சம்பாஷணையின் ஓர் பாகத்தை யவள் கேட்டது அவன் ஏற்பாட்டிற்கு அனுகூலமாகவே யிருந்தது. அப்படி அச் சம்பாஷணையை யாரும் கேட்க லாகாதென்று அவன் கருதியிருந்தால் ஒரு போதும் அஜாக்கிரதையாயிருந்தேயிரான்.

அமிர்தம்மாள் நித்திரை செய்து கொண்டிருக்கையில் அம்பாலிகையும் ஆனந்தலிங்கும் பேசிக் கொண்டிருந்ததை வேலைக்காரி கண்டு சென்று அவளிடம் கூறினாள். அதன்மேல் அமிர்தம்மாள் எழுந்து வந்து அவர்கள் சம்பாஷணையில் கொஞ்சம் கேட்டதும் அது கறுப்பண்ணனுக்கு விரோதமானதென்று தெரிந்து கொண்டு உடனே சென்று ஒரு தந்தி சமாசாரம் எழுதி சாம்பனிடம் கொடுத்து தந்தியாபீசுக்கனுப்பி விட்டாள்.

அக்கடிதத்தில் அடியிற்கண்ட சமாசாரம் எழுதப்பட்டிருந்தது.

"மா௱ ௱ ஸ்ரீ கருப்பண்ணப் பிள்ளைக்கு—

அவன் இங்கே வந்திருக்கிறான். உடனே பலமான சில ஆட்களை யழைத்துக் கொண்டு வா. அவன் சிங்கத்தைப்போன்ற முரட்டுப் பலமுடையவன்."

(தொடரும்) **ஆரணி-குப்புசாமி முதலியார்,**

## இலங்கை நேயர்களுக்கோர் அறிக்கை.

இப்பொழுது நமது "ஆனந்தபோதினி" யின் ஏஜண்ட் எஸ். இராமானுஜாச்சாரியார் சிலோனில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். தற்சமயம் அவர் கொழும்பு நகரி லிருக்கின்றார். வேண்டியவர்கள் அவரிடத்தில் சந்தாசெலுத்தி "ஆனந்தபோதினி" க்குச் சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளலாம். நமது காரியாலயத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள புஸ்தகங்களுக்கும் ஆர்டர் கொடுக்கலாம்.

## வர்த்தமானக் குறிப்பு.

மின்னலைப்போன்ற பிரகாசமுள்ள புதுமையான நீலவர்ண மின்சார விளக்குகளை வானத்திலே தொங்கவிடுவதனால் இரவையும் பகலைப்போல் வெளிச்சமுள்ளதாகச் செய்துவிடலாமென்று மேல்நாட்டு பௌதிகசாஸ்திரி ஒருவர் கூறுகின்றார்.

* * * * * *

ஒருமணிநேரத்தில் 2000 டன் எடையுள்ள நிலக்கரியை இறக்கும் சக்தி வாய்ந்த புதிய யந்திரமொன்றை ஜூலைமாதம் 11-ந் தேதியன்று இங்கிலாந்திலுள்ள ஈஸ்டுஹாம் என்ற நகரத்தில் நமது மன்னர்பிரான் ஓடவைத்தார். நிலக்கரி தூக்கப்படும்பொழுது அதன் நிறையைக் கணக்கெடுப்பதற்கு அந்த யந்திரத்தில் ஒரு கருவி இணைக்கப்பட்டிருக்கின்றதாம்.

* * * * * *

ஸ்தம்பூலிலுள்ள சாரோ ஆகா என்ற பெயருள்ள ஒரு மனிதனே இப்பொழுது உலகத்திலுள்ள வயது சென்றவர்களில் முதன்மையானவனும். இப்பொழுது அவனுக்கு வயது 153.

* * * * * *

நோய்களின் பயனாகவே மனிதர்கள் குற்றங்களைச் செய்கின்றார்கள் என்று மேல்நாட்டு அறிஞர்களில் பலர் கூறுகின்றனர். குற்றஞ் செய்கின்றவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பக்கூடாதென்றும், அவர்களை வைத்திய சாலைகளுக்கு அனுப்பி அங்கு சிகிச்சை பெறும்படி செய்யவேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்துகின்றார்கள். அவர்கள் கூறுவதில் உண்மை யிருக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

* * * * * *

இங்கிலாந்து தேசத்திலுள்ள ஸமர்ஸட் ஜில்லாவில் மிஸஸ் பிரிட்டன் என்ற பெண்மணியின் கணவருக்கு உடம்பில் தீப்பிடித்து அதனால் சதை வடுவுண்டபோது டாக்டர்கள் அந்த இடத்தில் வேறு சதையை வைத்துக் கட்டவேண்டுமென்று கூறினார்கள். சுமார் 50 பேர்கள் [illegible] சதையைக் கொடுத்து அந்த மனிதனைக் காப்[illegible] முன்வந்தார்கள். கடைசியில் மிஸஸ்பிரிட்டன் என்ற பெண்மணி[illegible] தனது சதையை அறுத்துக் கொடுத்துத் தனது ஆருயிர் காதலனைக் கா[illegible]ற்றினாளாம். இப்படிப்பட்ட பெண்மணிகள் தற்பொழுது நமது நாட்டில் எத்தனைபேர் இருக்கின்றார்கள்? இதுவல்லவோ உண்மையான பதி பக்தி!

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

அக்ஷயஹுல புரட்டாசிமூ—கலியுகாதி 5028, சாலிவாகனம் 1849,
பசலி 1336—கோல்லமாண்டு 1102—ஹிஜரி 1345
இங்கிலீஷ் 1926ஹுல செப்டம்பர்மூ—அக்டோபர்மூ

| புரட்டாசி | செப்டம்பர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | வெ | தச31-25 | பூரா12-13 | பி12-13சி | கெஜலக்ஷ்மி விரதம் |
| 2 | 18 | சனி | ஏகா25-3 | உத்8-18 | சித்60 | சர்வமத்வ ஏகாதசி |
| 3 | 19 | ஞா | து17-45 | திரு3-3 அவி56-28 | அ3-3மா | பிரதோஷம், அவமாகம், வாமனஜயந்தி |
| 4 | 20 | திங் | திர8-30 சது59-10 | சதை49-5 | சித்49-5அ | அவமாகம், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் |
| 5 | 21 | செவ் | ○49-30 | பூரட்41-28 | ம41-28அ | அவமாகம், பௌர்ணமி |
| 6 | 22 | புத | பிர40-10 | உத்-3355 | சி33-55ம | மகாளயபட்ச ஆரம்பம் |
| 7 | 23 | வியா | துதி31-20 | ரேவ27-8 | சித் 27-8அ | அசூன்யசயன விரதம் |
| 8 | 24 | வெ | திரி23-50 | அஸ்21-28 | அ21-28சி | பிரஹத்யும விரதம் |
| 9 | 25 | சனி | சது18-0 | பர※17-25 | சி17-25அ | கிருத்திகை, மாடு வாங்க, அடுப்புவைக்க |
| 10 | 26 | ஞா | பஞ்14-3 | கிரு15-15 | சித்60 | அஸ்தா கார்த்திகை 31-45, விதைவிதைக்க |
| 11 | 27 | திங் | சஷ்11-43 | ரோ15-8 | அமி60 | சந்திரசஷ்டி |
| 12 | 28 | செவ் | சப்12-25 | மிரு17-10 | சி17-10ம | மஹாலட்சுமி விருதம் |
| 13 | 29 | புத | அ14-48 | திரு21-10 | சித்60 | கெஜகௌரி விரதம் |
| 14 | 30 | வியா | நவ18-45 | புன-26-45 | சித்60 | |
| 15 | 1 | வெ | தச24-5 | பூச33-38 | மர60 | |
| 16 | 2 | சனி | ஏ30-15 | ஆயி41-5 | மர41-5அ | |
| 17 | 3 | ஞா | து39-10 | மக 48-48 | ம48-48சி | |
| 18 | 4 | திங் | திர43-3 | பூர56-18 | சித்60 | |
| 19 | 5 | செவ் | சது48-53 | உத்60 | அமி60 | |
| 20 | அக்டோபர் 6 | புத | ●54-13 | உத்3-20 | மர3-20அ | |
| 21 | 7 | வியா | பிர58-43 | அஸ்9-45 | சித்60 | |
| 22 | 8 | வெ | துதி60 | சித்15-30 | சித்60 | |
| 23 | 9 | சனி | துதி2-23 | சுவா20-23 | அ20-23சி | |
| 24 | 10 | ஞா | திரி5-18 | விசா24-30 | மர60 | சித்ரா கார்த்திகை-4-15 |
| 25 | 11 | திங் | சது7-15 | அனு27-35 | சித்60 | உபாங்கலலிதா கௌரி |
| 26 | 12 | செ | பஞ்8-10 | கேட்29-38 | ம29-38அ | சஷ்டி [விரதம் |
| 27 | 13 | புத | சஷ்7-40 | மூல30-25 | ம30-25அ | சாஸ்வதி ஆவாஹனம் |
| 28 | 14 | வியா | சப்5-55 | பூரா29-48 | சித்60 | கணிதாரம்பம் செய்ய |
| 29 | 15 | [illegible] | [illegible]2-50 நவ[illegible] | உத்27-48 | சி27-48ம | சாஸ்வதி பூஜை, ஆயுத பூஜை, மஹாநவமி |
| 30 | 16 | சனி | த[illegible]52-20 | [illegible]ரு24-25 | சித்60 | துலாரவி நாழிகை-48-23, விஜயதசமி |

| | | | |
|---|---|---|---|
| | செ | | ராகு |
| குரு | 1௳ கன்-புத<br>12,, விரு-சனி<br>13,, கன்-சுக்<br>19,, து-புத | | புத சுக் |
| கே | | சனி | சூரி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.

169 Sh
சென்னை-600 00[illegible]

# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம் (மூன்றும் பதிப்பு)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் ஷை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.



☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றும் பதிப்பு இப்போது வெளி வந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பகீகாப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீக்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

## மலையை விழுங்கிய மகாதேவன் கதை

படிக்கப் படிக்கச் சிரிப்பையுண்டாக்குவது. அளவற்ற ஆனந்தந் தருவது. அறிவை வளர்ப்பது. சகலரும் வாசிக்கத்தகுந்தது. விலை அணு 6.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

*இக்குறியுள்ளவை டெக்ஸ்டுபுக்கமிடியாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார் ரூ.அ.

| இயற்றியவை. | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 | *குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| மதனாம்பாள் 2-பாகம் ... | 3 | 0 | *நரிவிருத்தம் மூலம் உரையும் | 0 | 4 |
| லோகனாயகி ... | 1 | 0 | *ஸ்ரீபாலன் ... | 0 | 10 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 | *உதயணன் ... | 0 | 8 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 | *தசக்கிரீவன் ... | 0 | 14 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 | *போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| இந்திராபாயி ... | 2 | 8 | *சதானந்தர் ... | 1 | 4 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 | *ஜீவகன்வசனம் ... | 1 | 0 |
| மஞ்சள்அறையின் மர்மம் ... | 1 | 8 | *கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| கற்கோட்டை ... | 2 | 0 | *பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| பூங்கோதை ... | 0 | 10 | *வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது | | |
| வீரநாதன் ... | 0 | 12 | சிரோமணிகள் ... | 0 | 10 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 8 | 8 | *கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 | *அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 | *நீலக்கொடி ... | 0 | 5 |
| ரத்னபுரி ரகசியம் 2-பாகமும் | 4 | 0 | *மணவாளன் ... | 0 | 3 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | *பரசுராமன் ... | 0 | 3 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | *சிசுபாலன் ... | 0 | 8 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | *அங்கதன் ... | 0 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 | *தசாவதாரம் ... | 0 | 6 |
| பத்மாஸனி ... | 0 | 14 | *கிருஷ்ணன் தூது வசனம் | 0 | 8 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | *சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| மின்சாரமாயவன் ... | 1 | 8 | *கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 | *சத்தியவசனி ... | 0 | 4 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய | | | *விமலன் ... | 0 | 4 |
| சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 | *கண்ணபிரான் ... | 0 | 4 |
| *சகோதரவாஞ்சை ... | 0 | 7 | *செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| | | | *நாலுமந்திரிகதை ... | 0 | 4 |
| | | | *மங்களேசுவரன் ... | 0 | 8 |
| மெடீரியா மெடிகா ... | 3 | 0 | *தக்கன் ... | 0 | 6 |
| மலையாளபகவதி ... | 1 | 0 | *சீமந்தனி ... | 0 | 8 |
| அற்புத நவநீதாம்பை ... | 1 | 0 | ஞானரத்தினம் ... | 0 | 4 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 | இந்து லீகா ... | 0 | 8 |
| துயராளன் கதை ... | 0 | 12 | ஜெகதலஜெகஜ்ஜோதி ... | 0 | 8 |
| பூலோக லக்ஷ்மிகதை .. | 0 | 10 | மெய்க்காதலி ... | 0 | 8 |
| மகாதேவன் ... | 0 | 6 | மேனாமினுக்கி கதை ... | 0 | 8 |
| ராமாயண ஓடம் ஏலப்பாட்டு | 0 | 3 | வீணாகானன்ஞானேந்திரி... | 0 | 8 |
| சனகரத்தினம் ... | 0 | 8 | மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 | சோமளவல்லி கதை ... | 0 | 8 |
| நளினசுந்தரி ... | 0 | 10 | விகடவல்லி கதை ... | 0 | 6 |
| மதுசூதனன் ... | 0 | 10 | கமலமதி ... | 0 | 8 |
| விநோத கதைத்திரட்டு ... | 0 | 5 | காமசேன ரசிகா ... | 0 | 8 |
| கலியாண சந்தடியில் தாலி | | | பூர்ணவல்லி ... | 0 | 6 |
| கட்ட மரந்தகதை ... | 0 | 5 | பகவத்கீதாசங்கிரகம் ... | 0 | 2 |
| *கம்பராமாயண சங்கிரக | | | ஸ்திரீபுருஷஜாதக திறவுகோல் | 0 | 8 |
| வசனம் ... | 2 | 0 | மருமக்கள் துயரம் ... | 0 | 2 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஞானசெல்வாம்பாள் அல்லது இரண்டு சகோதரிகள் 5-பாகம்

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. நூற்றுக்கு மேற்பட்ட பல அத்தியாயங்களையுடையது; "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத்தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் மேலும் ஆனந்தமாக முடிவு வரை சென்றுகொண்டே யிருக்கும். படிப்பவர்கள் இப்புத்தகத்தைக் கை விடாதபடி ஆகாரமுண்ணுங் காலத்திலுங்கூட விரித்தபடியே பார்த்துக் கொண்டு சாப்பிடும்படி அவ்வளவு இனிமை இந்நாவலில் அமைந்திருக்கின்றது.

கதாநாயகிகளாகிய ஞானாம்பாள், செல்வாம்பள் என்ற இரண்டு சகோதரிகளும், தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்குமுலவிச் சகல ஆட்வர்களுடன் பழகிக்கொண்டிருந்ததால் அடைந்த பல வகைத் துன்பங்களும், வஞ்ச நெஞ்சர்களாகிய படுமோசக்காரர்களால் நிரபராதிகளாகிய பலர் பெரிய பெரிய விபத்துக்களுக்குள் சிக்கி மீள்வதும், பஞ்சமாபாதகர்கள் அஞ்சாமல் நல்லோர்க்கியற்றும் சஞ்சலச் செயல்களும், நெஞ்சு திடுக்கிடும் விஷயங்களும், முடிவில் தீயோர் பல ஆபத்துகளில் சிக்கி அடியோடொழிவதும், நல்லோர் சுகமடைவதும், இன்னும் எண்ணிறந்த பற்பல அற்புத விஷயங்களும் இதில் அடங்கி யிருக்கின்றன.

நான்கு பாகங்களில் தனித்தனி ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0

ஐந்தாவது பாகம் மாத்திரம் விலை ரூபா 1 10 0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களில் ஐந்து பாகங்களும் சேர்த்து வாங்குவோருக்கு 30-9-26 வரையில் அவற்றின் விலை ரூபா 8.

## கற்கோட்டை

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். நீதியைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2.

## ஆனந்தஸிங்

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதில் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தஸிங்கின் அதிசயபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடையோருமாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையுமளிக்கும். 492-பக்கங்கள் கொண்டது; விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

மர்மங்கள் வெளியாய் விட்டன

# எதன் மர்மங்கள்?

# மணவாழ்க்கையின் மர்மங்கள்

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர்வேத, யூனனி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக்கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியமாகும்; கையி லெடுப்பதே போக்கிய மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் நேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலையாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்தினவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் எம்மால் வெளியிடப்பட்ட "கோக்கோகக்கோலம்" என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மணவாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—0—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 0 | சதிபதிகளின் மர்மம் | 1 | 0 0 |

## வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | ரூ7 | 8 | சௌந்தர கோகிலம் | ரூ. 1 | 8 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கையர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

## தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| கமலாக்ஷி | 1 | 12 | ஞானசம்பந்தம் | 1 | 4 |
| ஞானபிரகாசம் | 1 | 8 | சிவஞானம் | 1 | 4 |
| ஞானம்பிகை | 1 | 8 | விஜயசுந்திரன் | 2 | 0 |

## ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விஜயராகவன் | ரூ. 1 | 0 | மோஹனசுந்தரம் | ரூ. 0 | 12 |
| இராஜேந்திரன் | 1 | 0 | ஆநந்தகிருஷ்ணன் | 0 | 12 |
| இராஜாம்பாள் | 0 | 12 | வரதசுந்தரம் 2-பாகம் | 2 | 0 |
| சந்திரகாந்தா | 0 | 12 | ஜெயரங்கன் அச்சில் | | |

விலாசம்:—ஆரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

# மஞ்சள் அறையின் மர்மம

இதுகாறும் எழுதிய பல துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனையும் வாசித்தால் இத்தகைய ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றன வாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்ந்திருக்கின்றன. விலை ரூ. 1—8—0


# கமலசேகரன்

ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைபோல் அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாக விருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரியமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.

# நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0

தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## MAHABARATHA BY S. T. IYENGAR M.A., L.T.

Being a Concise yet beautiful narration of the Subject-matter commencing from the Boyhood of the Pandavas to the very end *viz.* the re-establishment of peace, contentment and everything that is virtuous. Every incident is portrayed suitably with half tone pictures that tell their own tale. A Book that *must* be read by every one. A splendid piece of literature.—*As. 12 per copy.*

# G. W. M. REYNOLDS'

## BOLD TYPE EDITIONS.

| | | | Rs. | As. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. ... | 17 | 0 |
| 2. | Joseph Wilmot ... | 8 vols. ... | 5 | 0 |
| 3. | Ellen Percy ... | 8 vols. ... | 5 | 0 |
| 4. | Mary Price ... | 8 vols. ... | 5 | 0 |
| 5. | Rye House Plot ... | 4 vols. ... | 3 | 0 |
| 6 | The Young Duchess ... | 4 vols. ... | 3 | 0 |
| 7. | Rosa Lambert ... | 4 vols. ... | 3 | 0 |
| 8. | Loves of the Harem ... | 4 vols. ... | 3 | 0 |
| 9. | Margaret ... | 4 vols. ... | 3 | 0 |
| 10. | The Massacre of Glencoe | 4 vols. ... | 3 | 0 |
| 11. | The Virgin's Kiss ... | 4 vols. ... | 3 | 0 |
| 12. | Canonbury House ... | 3 vols. ... | 2 | 4 |
| 13. | The Mysteries of Old London | 3 vols. ... | 2 | 4 |
| 14. | Pope Joan ... | 3 vols. ... | 1 | 12 |
| 15. | The Soldier's Wife ... | 2 vols. ... | 1 | 8 |
| 16. | May Middleton ... | 2 vols. ... | 1 | 8 |
| 17. | Faust ... | 2 vols. ... | 1 | 8 |
| 18. | Leila or the Star of Mingrelia | 2 vols. ... | 1 | 8 |
| 19. | Robert Macaire ... | 2 vols. ... | 1 | 4 |
| 20. | Mary Stuart ... | 2 vols. ... | 1 | 4 |
| 21. | Seamstress ... | (Complete) | 1 | 0 |
| 22. | Grace Darling ... | " ... | 0 | 12 |
| 23. | The Young Fisherman | " ... | 0 | 10 |
| 24. | Agnes ... | 9 vols. ... | 6 | 0 |
| 25. | Kenneth ... | 4 vols. ... | 3 | 0 |
| 26. | Omar ... | 4 vols. ... | 3 | 0 |
| 27. | Coral Island ... | 4 vols. ... | 3 | 0 |
| 28. | The Wagner ... | 3 vols. ... | 1 | 12 |
| 29. | Master Timothy's Book Case | 3 vols. ... | 1 | 12 |
| 30. | Parricide ... | (Complete) | 1 | 12 |
| 31. | Stories Told by a Gendarme | (Complete) | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | ... | 1 | 0 |

## ALFRED or Adventures of a French Gentleman.

This novel, written by G.W.M. Reynolds, during his exile in the French Shores is indeed the most eloquent presentation of a lively French plot, in which play several Ladies & Gentlemen in various rolls of love, fashion and adventure peculiar to the French Shores. The comprehensiveness of the plot, the development of the Story proper, the numerous eloquent descriptions and appealing dialogues of characters in love and adventurous scenes and the sure methods of the clever French detective in bringing to book the very clever and very unscrupulous gang of dacoits will be very interesting throughout. Numerous intrigues of a highly absorbing nature interleave the pages with the charm that is its own.

**In One Vol. Re. 1 0 0.**

*Apply to:*—**SUPERIOR WATCH Co.,**

***P. B. No. 167, Madras.***

## கனகபூஷணம்

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுது வராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்துகொள்ளக்கூடியது.

2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

## அதிர்ஷ்டம்.

1. நமது ஜோதிர் வித்யாசாலையில் கீழ்கண்ட புஸ்தகங்கள் மூலம் குரு சிஷ்ய பரம்பரையாக நேரில் உபதேசிப்பதுபோல் உதாரண ஸகிதம் எளிய தமிழ் வசன நடையில் ஜோதிஷ சாஸ்திரம் முழுவதையும் கற்றுக் கொடுக்கிறோம்.

புஸ்தக விபரம்.

2. (1) ஜோதிஷ ஸம்ஞாபிரகாணம், (2) ஜாதக கணிதபாகம் வகையரு, (3) ஜாதக பலபாகம், (4) முகூர்த்தபாகம், (5) ஆருடபாகம், (6) நஷ்ட ஜாதக கணிதபாகம் பரிகாரசாந்தி ஸகிதம், (7) ஜோதிஷ ஜாதகபாலகாரகப் பிரகாசினி, (8) பாலபலப் பிரகாசினிகவி, (9) அஷ்டவர்க போதினி, இவ்வொன்பது பாகமும் சேர்ந்த புஸ்தகசெட் 1-க்கு ரூ. 7. எழு. 1 முதல் 6-பாகம் வரை செட் 1க்-கு ரூ. 5. ஐந்து. தனித்தனி 1-க்கு. ரூ 1. ஒன்று வீதம். வி. பி. சிலவு தனி.

3. முக்கிய அறிவிப்பு: ஜாதகங்கணித்தல், ஜாதகபலம், முகூர்த்தப் பொருத்தம், ஆருடம் முதலியவைகளால் தங்கள் எதிர்கால சுகயோகாதி பலன்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், ஷை ஆபீஸ் நிபந்தனையிலடங்கிய சிறு கட்டணவிகிதத்தை செலுத்தி தங்கள் கோரியபடியே தெரிந்து கொள்ளலாம். ஸகலவிபரமும் இனாமாய் தெரிவிக்கப்படும்.

**விலாசம்:—பி. எல். சுந்தர சாஸ்திரிகள்,**

ஜோதிடர், இந்து ஜோதிர் வித்யாசாலை,

**திருநெல்வேலி டவுன்.**

---

## மதுரை ஜவுளிகள்

சொந்த நெசவுகளில் தயார் செய்கிறவர்களிடம் வாங்கினால் தரகர்களின் ஏமாற்றமின்றி லாபமடைவீர்கள். உண்மையை அறியுங்கள். உயர்ந்த மல்லில் சாயம்போட்ட சிகப்பு, கருப்பு, பச்சை, புரவுன், ஸ்நவ்ப், முதலியகலர் சேலைகள், தாவணிகள், சித்தாடைகள் கிடைக்கும்:— 2½ முழ அகலம் 18 முழ நீளம் ரூ. 4-14-0; ஷை 2½ முழ அகலம் 16 முழ நீளம் ரூ. 4-2-0; 3 முழ அகலம் 18 முழ நீளம் 7 2 0

2½ முழ அகலம் 18 முழ நீளம் சுண்ணடி சேலைகள் சிகப்பு, கருப்பு, அம்பர்சா 1, 3, 7 புள்ளிகள் போட்டது ரூபா 7 முதல் ரூபா 8 12 .0 வரை. முழுவிபரமடங்கிய காட்லாக் இனாம்.

**விலாசம்:—M. R. G. பெருமாளய்யர், ஜவுளிவியாபாரம், மதுரை.**

**தந்தி விலாசம்:—முகுந்தன்:—மதுரை.**


## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் என் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிச வாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உடன் பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனி போல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ் தப்படுத்துவது நிகாற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்.



அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப் பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கை கண்ட மருந்து.

விலை அணா 10

---

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்லதன். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிருதாஞ்சன் டிப்போ,**

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.